

# சவால்களை கடந்து சௌபாக்கியத்தை நோக்கி

அபிவிருத்தி லொத்தர் சபை

ஆண்டறிக்கை 2022

# சவால்களை கடந்து
# சௌபாக்கியத்தை நோக்கி

அபிவிருத்தி லொத்தர் சபை (DLB) தனது 39 ஆண்டுகள் மாற்றங்கள் ஏற்படுத்தும் வளர்ச்சியை நிலைநிறுத்தியுள்ளது. இதுவரையிலான எங்கள் பயணம் குறிப்பிடத்தக்க சாதனைகளுடன் பதிவாகியுள்ளது. இயக்கச் சூழலில் முன்னெப்போதும் இல்லாத சவால்கள் இருந்தபோதிலும், எங்கள் நிறுவன வரலாற்றில் அதிக இலாபம் ஈட்டுவதில் வெற்றி பெற்றது.

எங்கள் வாடிக்கையாளர்களின் அபிலாஷைகளுடன் வளர்ச்சியடைந்து, லொத்தர் சீட்டுகளில் புதிய பரிமாணங்களையும் மதிப்பையும் உருவாக்குவதிலும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மறுவரையறை செய்வதில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம்.

# உள்ளடக்கம்

நிறுவனம் பற்றிய தகவல்கள் | 04
எமது தொலை நோக்கு மற்றும் பணி | 05
எமது வரலாறு பற்றிய ஒரு சுருக்கமான பார்வை | 06
முக்கியமான திருப்புமுனைகள் | 08
முக்கியமான நிதிசார் தகவல்கள் | 10
தலைவரின் செய்தி மற்றும் முன்னேற்ற அறிக்கை - 2022 | 12
பணிப்பாளர் சபையின் மீளாய்வு | 14
பணிப்பாளர் சபை - 2022 | 15
தற்போதைய பணிப்பாளர் சபை | 16
முகாமைத்துவக் குழு | 18
கனிஷ்ட முகாமையாளர்கள் | 19
தொழிற்பாட்டு மீளாய்வு | 20
உற்பத்திகளின் தொகுப்பு பற்றிய பகுப்பாய்வு | 24
நிலைபேறான தன்மை பற்றிய அறிக்கை | 30
2022.12.31 ஆம் திகதியில் ஊழியர் எண்ணிக்கை நிலைமை | 33
பெருநிறுவன ஆளுகை | 35
இடர்நிலை முகாமைத்துவம் பற்றிய அறிக்கை | 39
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை | 40
**நிதி அறிக்கை**
சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை | 42
கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால்
மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 46
விரிவான வருமானக் கூற்றின் கணக்கு விபரம் | 55
நிதி நிலைக் கூற்று | 56
காசுப் பாய்வுக் கூற்று | 57
உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று | 58
கணக்கீட்டு கொள்கைகள் | 59
பிரிவுசார் அறிக்கை | 64
இறுதிக் கணக்குகளுக்கான குறிப்புகள் | 66
பத்தாண்டு கால பொழிப்பு | 76

**Digital Version**

*This Annual Report can be accessed through our website*

# நிறுவனம் பற்றிய தகவல்கள்

### சபையின் பெயர்

அபிவிருத்தி லொத்தர் சபை

### சட்ட வடிவம்

இச்சபை 1997 ஆம் ஆண்டில் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டம் எனும் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது.

### ஆரம்பிக்கப்பட்ட திகதி

1983 ஜனவரி 19

### அலுவலகத்தின் பதிவு முகவரி

இல. 356 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

### தொலைபேசி இலக்கம்

0112 333 546-8, 0114 824 824

### தொலைநகல் இலக்கம்

0112 333 545

### மின்னஞ்சல் முகவரி

info@dlb.lk

### இணையத்தளம்

www.dlb.lk

### வரி அடையாள இலக்கம்

409089844

### பணிப்பாளர் சபை

திரு. அஜித் குணரத்ன நாரகல – தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

திரு. டபிள்யூ.ஏ. சரத் குமார – பணிப்பாளர்
செல்வி. கே.ஏ.எச்.சீ. புபுதுசிறி – பணிப்பாளர்
திருமதி. ஜெனட் ஜயவர்தன – சட்டத்தரணி – பணிப்பாளர்

செல்வி. கே.ஏ.எச்.சி. புபுதுசிறி – பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், நிதி அமைச்சு பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை.

திருமதி. ஜேனட் ஜெயவர்தன - சட்டத்தரணி - பணிப்பாளர்
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை.

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் ஆணையாளர்

### வங்கியாளர்கள்

மக்கள் வங்கி
இலங்கை வங்கி
சம்பத் வங்கி பிஎல்சி
ஹட்டன் நெஷனல் வங்கி

# எமது தொலைநோக்கு மற்றும் பணி

## தொலைநோக்கு பார்வை

அதிர்ஷ்டத்தை தோற்றுவிக்கும் இலங்கையின் முன்னணி அரசு நிறுவனமாக மாற்றமடைதல்.

## பணி

பங்காளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விடயத்தில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நம்பகத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதுடன் சிறப்புத் தன்மைகளை பேணிவரும் அதேவேளை நவீன மற்றும் கவர்ச்சிமிக்க லொத்தர்களை நடாத்துதல்.

## குறிக்கோள்கள்

| | | | |
|---|---|---|---|
| சந்தை பங்கை அதிகரித்துக் கொள்ளுதல். | சனாதிபதி நிதியத்திற்கு வழங்கும் பங்களிப்பினை அதிகரித்தல். | புதிய தொழில்நுட்பத்தை தழுவிக் கொள்ளுதல் மற்றும் பயனுறுதி மிக்க வகையில் பயன்படுத்துதல். | பங்கீடுபாட்டாளர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல். |

## எமது அடிப்படை விழுமியங்கள்

| | |
|---|---|
| நேர்மை | நாங்கள் அறிமுகப்படுத்தும் லொத்தர்களும் நாம் தொழில் முயற்சியை மேற்கொள்ளுகின்ற விதமும் நியாயமானதும் நேர்மையானதும் நம்பகத்தன்மையும் கொண்டதாகும். |
| நேர்மறையான மனோபாவம் | லொத்தர் தொழில் முயற்சியை மேற்கொள்ளும்போது அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் தாங்கள் முகம் கொடுக்கும் அனைத்து சவால்களையும் நேர்மறையான அணுகுமுறையின் ஊடாக எதிர்கொள்கின்றனர். |
| பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு செயலாற்றுதல் | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களே நம்பிக்கையுடன் தங்களுடைய பணிகளை மேற்கொள்வதுடன் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கு கவனம் செலுத்துகின்றனர். |
| புத்தாக்கம் | தொழில் முயற்சியை மேம்படுத்தக்கூடிய முறைகள் தொடர்பாக கருத்துக்களை ஆராய்வதற்கும் மூலோபாயங்களையும் போட்டி தன்மையையும் கொண்ட சந்தை மாற்றங்களுக்கு பதில் அளிக்கும் வகையில் துரிதமாக தீர்மானங்களை மேற்கொண்டு செயல்படுவதற்கும் அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது. |
| குழுவாகச் செயற்படுதல் | அபிவிருத்தி லொத்தர் சபையின் ஊழியர்கள் வெளிப்படைத்தன்மை பரஸ்பர கௌரவம் மற்றும் தனிநபர் அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்தி நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு கைகோர்த்துக் கொண்டு செயற்படுகின்றனர். |
| சிறப்புத் தன்மையை இலக்குவைத்தல் | சேவையின் தரத்தை உச்ச மட்டத்தில் பேணிவரும் பொருட்டு ஊழியர்கள் தொடர்ச்சியாக முயன்று வருகின்றனர். |

# எமது வரலாறு சுருக்கமாக

இந் நாட்டு மக்களின் வாழ்விற்கு ஒளியூட்டும் அபிவிருத்தி லொத்தர் சபை, 1983 ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் மையம் எனும் பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. இத் தேசத்து மக்களின் வாழ்விற்கு சக்தியாக அமையும் ஜனாதிபதி நிதியம் பல இன்னல்களுக்கு மத்தியில் உயர் கல்விக்கு தகைமை பெறும் மாணாக்களுக்கு பாரிய உதவியாக அமையும் மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திற்கும் நிதி ஈட்டிக் கொடுப்பது இதன் முக்கிய நோக்கமாக அமைந்து ஸ்தாபிக்கப்பட்டது.

அம் முக்கிய நோக்கங்களுக்கு மேலதிகமாக வெவ்வேறு நிதி மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பலவற்றிற்கு நிதி வழங்கும் முகமாக இடைவிடா வருமான உற்பத்தி முறைமையினை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்த கலாநிதி திரு. விக்ரம வீரசூரிய அவர்கள், உடனடி லொத்தர் திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்த தனியார் மற்றும் அரச நிறுவனங்கள் பலவற்றிற்கு அழைப்பு விடுத்தார்.

அவ் அழைப்பிற்கு சிறப்பான பதிலினை வழங்கும் விதமாக அப்போது ஜனாதிபதியாக இருந்த அதிமேதகு திரு.ஜே. ஆர். ஜயவர்தன அவர்களினால் 2.2 மில்லியன் ரூபாய் நிதி வழங்கப்பட்டதுடன், அமைச்சர் திரு. லலித் அதுலத்முதலி மூலமும் அதற்கு சமனான தொகை மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நிதியத்தினூடாக முதலீடு செய்ய விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

நிதியத்தின் வெற்றிக்காக விற்பனை செய்யப்பட்ட முதல் லொத்தர் “அபிவிருத்தி லொத்தர்” என பெயரிடப்பட்டது. இம் முயற்சிகளினூடாக இறுதியில் ஜனாதிபதி நிதியத்திற்கும், மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கும் நிதி வழங்கும் முகமாக அபிவிருத்தி லொத்தர் மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது.

மிக முக்கியமான வெற்றிகள் பலவற்றினை கடந்து அபிவிருத்தி லொத்தர் மத்திய நிலையம் அதிலிருந்து தனது பயணத்தினை தொடர்ந்ததுடன் முதல் வருடத்தில் வெற்றிகரமான வருமான இலக்கை அடைந்தது. அவ் இலாபத்தின் அதிக பங்குகள் அபிவிருத்தி லொத்தர் ஜனாதிபதி நிதியம் மற்றும் மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை அபிவிருத்தி லொத்தர் சபை தமது இலாபத்தின் அதிக பங்குகளை ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்கி வருகின்றது. ஜனாதிபதி நிதியம் ஊடாக அப் பங்களிப்பின் 50% ஐ மஹபொல உயர்க்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கும் வெவ்வேறாக வழங்கப்படுகின்றது.

1993 ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் மத்திய நிலையம் “அபிவிருத்தி லொத்தர் நிதியம்” என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் 1997 ஆகஸ்ட் மாதம் 12 ம் திகதி தற்போது நாம் பயன்படுத்தும் “அபிவிருத்தி லொத்தர் சபை” எனும் பெயரில் மீள ஸ்தாபிக்கப்பட்டது.

“அபிவிருத்தி லொத்தர்” பெயரில் அழைக்கப்பட்ட முதல் உடனடி லொத்தர் 10 ரூபாய் விலைக்கு நாடளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட்டதுடன், 24 மணித்தியாளங்களில் சுப்பர் பரிசுப்பொதி வெற்றியாளர்கள் (ஜக்பொட் வெற்றியாளர்கள்) இருவரினை உருவாக்க முடிந்தமை இன்றுவரை எமது உடனடி லொத்தர்களின் பிரபல்யத்திற்கு வழிவகுத்த காரணியாக அமைகின்றது.

1987ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் மத்திய நிலையம் மூலம் “சனிக்கிழமை அதிர்’டம்” (சனிதா வாசனாவ) எனும் பெயரில் தொலைக்காட்சி ஊடாக சீட்டிழுக்கப்பட்ட முதல் லொத்தராக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதன் ஆரம்பத்தில் சனிக்கிழமைகளில் மட்டும் சீட்டிழுக்கப்பட்டதுடன் தற்போது அது வாரத்தின் ஏழு நாட்களிலும் சீட்டிழுக்கப்பட்டு வருகின்றது. உடனடி லொத்தர்களில் வெற்றி பெறாத லொத்தர்களுக்காக விசேடமாக தயாரிக்கப்பட்டு 1998 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட வாசனா சக்கரய (அதிர்ஷ்ட சக்கரம்) நிகழ்ச்சி ஞாயிறு தினங்களில் தேசிய தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பப்பட்டது.

இந் நிகழ்ச்சிகளுக்கு கிடைத்த உயரிய வரவேற்பின் காரணமாக அபிவிருத்தி லொத்தர் சபை 1998ம் ஆண்டில் அபிவிருத்தி அதிர்ஷ்டம் பெயரில் தொலைக்காட்சி ஊடாக சீட்டிழுக்கப்படும் இரண்டாவது லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. அதன் தனித்துவமான விற்பனையினை கருத்திற்கொண்டு 2015 ம் ஆண்டில் இலக்கின விசேட அங்கத்துடன் அது ராசி அதிரஷ்டம் (லக்ன வாசனாவ) என பெயரிடப்பட்டது. தற்போது அது வாரத்தின் ஏழு நாட்களும் சீட்டிழுக்கப்படும் கவர்ச்சிகரமான லொத்தராக திகழ்கின்றது.

குறித்த சுப்பர் பரிசுப்பொதி பரிசுகள் மற்றும் வழமையான பரிசுகளுக்கு மேலதிகமாக அபிவிருத்தி லொத்தர் சபை 2004 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ம் திகதி “ஜயோதா” பெயரில் சீட்டிழுப்பொன்றினை அறிமுகப்படுத்தியதுடன் அது திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளில் தேசிய தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதன் ஆரம்ப சுப்பர் பரிசுப்பொதி 10 மில்லியனிலிருந்து ஆரம்பமாகியது. இலங்கை லொத்தர் வரலாற்றின் விசேட அடித்தாளத்தினை வைக்கும் முகமாக அபிவிருத்தி லொத்தர் சபை ஜயோதா சுப்பர் பரிசுப்பொதி வெற்றியாளர்களுக்கு ஒரு மில்லியன் பணப்பரிசு அல்லது ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய வீடொன்றினை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை 2009 ம் ஆண்டு 10 ம் திகதி “ஜனஜய” லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அது வியாழக்கிழமை மற்றும் ஞாயிறு தினங்களில் ஒளிபரப்பாகியது. அதிர்ஷ்டசாலிகள் சுப்பர் பரிசினை வெற்றிப்பெறுவதற்கு 64 இலக்கங்களிலிருந்து 04 வெற்றி இலக்கங்களை தெரிவு செய்வதுடன் மேலும் ஒரு இயந்திரத்தினூடாக தெரிவு செய்யப்படும் சுப்பர் இலக்கம் பொருந்த வேண்டும். இதன் சுப்பர் பரிசுப்பொதி 2.5 மில்லியன் ரூபாவிலிருந்து ஆரம்பமாகியது.

2012 ம் ஆண்டு ஜுலை மாதம் 11 ம் திகதி “சுப்பர் போல்” லொத்தர் அறிமுகப்படுத்தப்படுத்தல் இந் நாட்டு லொத்தர் வரலாற்றின் புரட்சிகரமான திருப்பு முனையாக அமைந்தது. 3 கோடி ரூபாய் ஆரம்ப சுப்பர் பரிசுப்பொதியினைக்கொண்ட இவ் விசேட லொத்தர் அக் காலகட்டத்தில் இந் நாட்டில் மிகப் பெரிய சுப்பர் பரிசுப்பொதியினை வழங்கிய லொத்தராக அமைந்தது. இன்று அது நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் கவர்ச்சிகரமான லொத்தராகும்.

2016 ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை பல புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்தியது.

அபிவிருத்தி லொத்தர் சபையினால் 2016 ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதி அபிவிருத்தி இலட்சாதிபதி எனும் புதிய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. அது 5.6 மில்லியன் விசேட விற்பனை இலக்கினை அடைந்தது. அத்துடன் 75 மில்லியன் சுப்பர் பரிசுப்பொதியுடன் 2016 ம் ஆண்டு ஏப்ரில் 08 ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட"கோடிபதி சனிதா" ஆரம்ப சீட்டிழுப்பு வட்டத்தில் 4.4 மில்லியன் லொத்தர் விற்பனையாகியது.

புதிய எதிர்ப்பார்ப்பினை உருவாக்கும் வண்ணம், புதிய கவர்ச்சிகரமான பணப்பரிசுகள் மூன்றுடன் அறிமுகப்படுத்தப்பட்ட "அபிவிருத்தி அதிர்ஷ்டம்" தொலைக்காட்சி சீட்டிழுப்பு 2016 ம் ஆண்டு டிசம்பர் 12 ம் திகதி மீள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக, இலங்கை லொத்தர் வரலாற்றின் வாரத்தின் ஏழு நாட்களும் சீட்டிழுக்கப்படும் முதல் லொத்தராக 2017 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதி "அத கோடிபதி" லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் லொத்தர் வியாபாரத்தின் மேன்மையினை கருத்திற்கொண்டு புதிய தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்துடன் 2020 ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை தமது கொள்வனவாளர்களுக்கு ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளினூடாக லொத்தர்களை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையானது "DLB Sweep App" ஐ சந்தைக்கு அறிமுகப்படுத்தியதினூடாகவே ஆகும். இவ் அறிமுகப்படுத்தலினூடாக அபிவிருத்தி லொத்தர் சபை இந் நாட்டின் புதிய சந்தையினை இலக்காகக் கொண்டு தெற்காசியாவின் முதல் டிஜிட்டல் லொத்தர் "சசிரி" எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

லொத்தர் நவீனமயமாக்களின் மேலும் பல பாதைகளை தேடிச் செல்லும் அபிவிருத்தி லொத்தர் சபை 2021 ம் ஆண்டு லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளையும் புதிய வடிவமைப்பிலும் புத்தாக்கத்துடனும் வழங்கியது. பழைய சீட்டிழுப்பு நிகழ்ச்சி அமைப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தலினூ டாகவே. அதன்போது சீட்டிழுப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் தொடர்ச்சியாக சிறிது நேரத்தில் ஒளிபரப்புச் செய்யும் வண்ணம் 2021 ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து "DLB Lottery Show" நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. அதனை முன்னிட்டு "DLB Lottery Show" எனும் பெயரில் Youtube Channel ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் நீண்ட காலம் லொத்தர் கொள்வனவாளர்களுக்கு அதிர்ஷ்டத்தினை வழங்கும் கோடிபதி கப்ருக லொத்தர் 12 கோடி ஆரம்ப பரிசுப்பொதி மற்றும் மிக கவர்ச்சிகரமான புதிய பரிசமைப்புடன் "கப்ருக" எனும் பெயரில் புது வடிவமைப்பில் வாரத்தின் ஏழு நாட்களும் சீட்டிழுக்கப்படும் லொத்தராக சந்தைக்கு வெளியிடல் 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் திகதி நடைப்பெற்றது. இதன் முதல் சீட்டிழுப்பு 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ம் திகதி நடைபெற்றது. அன்றிலிருந்து நாளொன்றுக்கு சீட்டிழுக்கப்படும் லொத்தர்களின் எண்ணிக்கை 06 ஆகியது.

2022 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09 ம் திகதி (வெள்ளிக்கிழமை) அதிர்ஷ்டத்தின் வெற்றி நாதம் "வலம்புரி" எனும் பெயரில் புதிய லொத்தர் ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் வாடிக்கையாளர்களை இலக்காக கொண்டு சந்தைக்கு அறிடுமுகப்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மொழி பேசும் வாடிக்கையாளர்களுகாக அப் பிரதேசங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வலம்புரி லொத்தரின் பிரபல்யம் காரணமாக நாடு முழுவிலும் விற்பனை செய்ய முகாமைத்துவம் தீர்மானித்தது.

அபிவிருத்தி லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது உன்னதமான இரு குறிக்கோள்களை மையமாகக்கொண்டே. அவை ஜனாதிபதி நிதியம், மஹபொல உயர்க்கல்வி நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு நிதி ஈட்டிக்கொடுப்பதாகும். ஆதலினால் அபிவிருத்தி லொத்தர் சபை தமது அனைத்து இலாபப்பங்குகளையும் ஜனாதிபதி நிதியத்திற்கே வழங்குகின்றது. இந் நாட்டு மக்கள் லொத்தர் ஒன்றுக்காக செலவிடும் இருபது ரூபாய் பணம் மீண்டும் அதிர்ஷ்டமாக மாற்றமடைந்து வெற்றி வாய்ப்புகளாகவும் அமைகின்றது, மேலும் நாட்டிற்கான கடமைகளை செய்யும் அபிவிருத்தி லொத்தர் சபை கடந்த 39 ஆண்டுகளில் ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்கிய நிதி பங்களிப்பு முப்பத்தாறு பில்லியனுக்கு (36) அதிகம் ஆகும்.

# முக்கியமான திருப்புமுனைகள்

**1983**

**இலங்கையில் முதல் முறையாக உடனடி சீட்டிழுப்பு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.**

**1987**

ந்நாட்டில் முதல் முறையாக தொலைக்காட்சி வாயிலாக சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட சனிதா வாசனாவ லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**1993**

அபிவிருத்தி லொத்தர் நிலையம் அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியமாக மாற்றப்பட்டது.

**1997**

அபிவிருத்தி லொத்தர் பொறுப்பு நிதியம் 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக அபிவிருத்தி லொத்தர் சபை எனும் பெயரில் மீண்டும் தாபிக்கப்பட்டது.

ரூபாய் 2 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வு மட்டத்தினை அடைந்து கொண்டது.

**1998**

வெற்றி வாய்ப்பினை பெற்றுக் கொள்ளாத உடனடி/ சுரண்டும் லொத்தர் சீட்டுகளுக்கு வாசனா சக்ரய (அதிர்ஷ்ட சக்கரம்) தொலைக்காட்சி சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது

•'முதல் பரிசாக சொகுசு மோட்டார் வாகனத்தை பரிசாக வழங்கும் 100 ரூபாய் பெறுமதியுடைய லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்கின்ற விண்டோஸ் மற்றும் யுரேகா உடனடி லொத்தர் சீட்டுடன் அபிவிருத்தி அதிர்ஷ்ட லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**1999**

2000 ஆம் ஆண்டு எதிர்நோக்க வேண்டியிருந்த தொழில்நுட்ப சவால்களுக்கு முகம் கொடுக்கும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் கணினி முறைமை புதுப்பிக்கப்பட்டது.

**2004**

அபிவிருத்தி லொத்தர் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோடி அம்சமாகிய பணப்பரிசு அல்லது ஒரு வீடு எனும் மாற்றுவழி முறையுடன் கூடிய ஜயோதா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

ரூபாய் 03 பில்லியன ஒட்டுமொத்த புரள்வு மட்டம் அடைந்து கொள்ளப்பட்டது.

**2008**

இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை கொழும்பு 2 எனும் முகவரியில் அமைந்துள்ள அபிவிருத்தி லொத்தர் சபைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சபைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ரூபாய் 5 பில்லியன் ஒட்டுமொத்த புரள்வினை பதிவு செய்தது.

**2010**

சுப்பர் பரிசுப் பொதியுடன் ஜனஜய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2011**

நியத்த ஜய லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2012**

ரூபாய் 30 மில்லியன் பெருமதியுடைய சிறப்பு ஜக்பொட் பரிசுடன் சுப்பர் போல் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2013**

ஆகக்கூடிய பெறுமதியுடைய ஜக்பொட் பரிசுத்தொகையை வழங்குகின்ற 'ஹைவே ட்ரீம்" லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2014**

குறுஞ்செய்தி சேவை ஊடாக லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

**2016**

சங்வர்தன லக்சபதி (அபிவிருத்தி இலட்சாதிபதி) கோட்டிபதி சனிதா மற்றும் சங்வர்தன வாசனா (அபிவிருத்தி அதிர்ஷ்டம்) ஆகிய லொத்தர்களை ஆரம்பித்தல்.

**2017**

அத கோட்டிபதி (இன்றைய கோடீஸ்வரர்) லொத்தர் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.சல

**2018**

IVR மற்றும் குறுஞ்செய்தி சேவை ஊடாக பெறுபேறுகளை அறியத் தரும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

**2019**

DLB Sweep App செயலியை அறிமுகப்படுத்துதல்.

**2020**

'சசிறி" டிஜிட்டல் லொத்தர் அறிமுகம்.

**2021**

ரூபாய் 120 மில்லியன் பெறுமதியுடைய கப்ருக ஜக்பொட் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2022**

வலம்புரி லொத்தர் சீட்டு அறிமுகம் செய்யப்பட்டது.

# முக்கியமான நிதிசார் தகவல்கள்

வருமானம் (ரூ. மில்)




வரிக்கு முந்திய இலாபம் (ரூ. மில்)




சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு (ரூ. மில்)




வருமான வரி (ரூ. மில்)




அரசுக்கான மொத்த பணவனுப்பல்கள் (ரூ. மில்)




மொத்த சொத்துக்கள் (ரூ. மில்)



| | 2022 | 2021 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு விளைவுகள்** | | |
| வருவாய் | 19,071,456,751 | 15,364,398,498 |
| மொத்த இலாபம் | 7,591,995,984 | 6,523,212,978 |
| வரிக்கு முந்திய இலாபம் | 3,266,591,501 | 2,953,528,558 |
| வரி செலவினங்கள் | 55,904,459 | 83,440,185 |
| தேறிய இலாபம் | 3,225,653,361 | 2,875,951,381 |
| சனாதிபதி நிதியத்திற்கான பங்களிப்பு | 3,210,687,041 | 2,870,088,373 |
| | | |
| **நிதி நிலைப் பற்றிய கூற்று** | | |
| **சொத்துக்கள்** | | |
| ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,095,292,917 | 1,158,675,958 |
| நிலையான வைப்புக்கள் | 1,742,324,887 | 1,142,259,436 |
| பதிவேடுகள் | 45,970,611 | 43,102,269 |
| வர்த்தக கடனாளிகள் மற்றும ஏனைய வருமதிகள் | 163,480,972 | 150,441,764 |
| முற்கொடுப்பனவுகள் மற்றும் வைப்புகள் | 6,223,428 | 11,141,943 |
| கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு | 557,240,367 | 900,006,350 |
| **மொத்த சொத்துக்கள்** | 3,610,533,182 | 3,405,627,719 |
| | | |
| **பொறுப்புகள்** | | |
| ஊழியர் நலன்சார்ந்த பொறுப்புகள் | (4,438,730) | (9,372) |
| விற்பனை முகவர்கள் மற்றும் விநியோகத்தரகளுக்கு செலுத்த வேண்டிய வைப்புகள் | 38,718,881 | 37,664,881 |
| கடன் செலவுறுதிச்சீட்டு செலுத்தவேண்டியவை | 123,353,560 | 130,268,260 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை | 771,026,177 | 640,706,596 |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தவேண்டியவை | 315,791,041 | 564,219,473 |
| செலுத்தவேண்டிய பரிசு | 1,003,306,515 | 962,793,104 |
| | | |
| **உரிமைப் பங்கு** | | |
| சனாதிபதி நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | 2,200,000 | 2,200,000 |
| பரிசுகளுக்கான ஒதுக்கக் கணக்கு | 725,956,289 | 448,131,648 |
| மீள்மதிப்பீட்டு மிகை | 620,583,095 | 614,729,237 |
| ஊழியர் நலன் திட்டத்தின் மீள் மதிப்பிடப்பட்ட இலாபம் / (நட்டம்) | 11,836,354 | 2,723,891 |
| **மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள்** | 3,610,533,182 | 3,405,627,719 |
| | | |
| **இலாபத்தன்மை விகிதம்** | | |
| தேறிய இலாப விகிதம் | 17% | 19% |
| மொத்த இலாப விகிதம் | 40% | 42% |
| | | |
| **திரவ நிலை விகிதம்** | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1 : 1.33 | 1 : 1.30 |
| உடனடி (திரவ) சொத்து விகிதம் | 1 : 1.30 | 1 : 1.27 |

# தலைவரின் செய்தி மற்றும் முன்னேற்ற அறிக்கை 2022

எதிர்வுகூறமுடியாத பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் கூட, அபிவிருத்தி லொத்தர் சபையானது அதன் ஆற்றல்மிக்க ஆதரவு அமைப்பின் ஆதரவுடன் அதன் இலக்குகளை நெருங்க முடிந்தது.

## தற்போதைய நிதிநிலை மதிப்பாய்வு - 2022

2022 ஆம் ஆண்டில், அபிவிருத்தி லொத்தர் சபையானது ரூபா. 19,755 மில்லியன் வருவாயை எட்டியுள்ளது என்று சபை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறது - இது முந்தைய ஆண்டை விட 26% அதிகமாகும். கோவிட்-19 தொற்றுநோய்க்குப் பிறகு, நிதி சாதனைகள் தொடர்பாக அதிக நிச்சயமற்ற நிலை உள்ளது. இருப்பினும், அபிவிருத்தி லொத்தர் சபையானது அதன் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைத் தொடர்ந்து வென்றது மற்றும் சவாலான சூழ்நிலைகள் காரணமாக, விற்பனையும் அதிகரித்துள்ளது. விற்பனை வருமானம் 19,212 மில்லியன் ரூபா என வரவுசெலவுத் திட்டத்தில் இருந்த போதிலும், உண்மையான வருமானம் 19,755 மில்லியன் ரூபாவாக இருந்தது. மறுபுறம், ஜனாதிபதி நிதியத்திற்கான உண்மையான பங்களிப்பு 3,211 மில்லியன் ரூபாவாகும் அதேவேளை அரசாங்கத்திற்கான உண்மையான வரி பங்களிப்பு 842 மில்லியன் ரூபாவாகும்.

| | 2021 | 2022 | மாற்றம் | % |
|---|---|---|---|---|
| வருமானம் (ரூ. மில்) | 15,730 | **19,755** | 4,025 | 26 |
| சனாதிபதி நிதியத்திற்கு பங்களிப்பு | 2,870 | **3,211** | 341 | 12 |
| வெற்றியாளர்களுக்கான பரிசுப் பணம் (ரூ. மில்) | 7,866 | **9,884** | 2,018 | 26 |

## எங்கள் சாதனைகள்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வேளையில் அந்நியச் செலாவணி நெருக்கடி நாட்டைப் பெரிதும் பாதித்துள்ள இவ்வேளையில், அரசாங்கச் செலவினங்களும், வருமான முகாமைத்துவமும் பெரும் முயற்சியுடன் பலரது மத்தியிலும் நிர்வகிக்கப்படும் இவ்வேளையில் கோவிட்-19 போன்ற நெருக்கடிகள் அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த ஆண்டு தனது சேவைகளைப் பராமரித்து வருவாய் இலக்குகளை எட்டியுள்ளது.

மேலும், உற்பத்திச் செலவு அதிகரித்துள்ள நேரத்தில், ஒட்டுமொத்தச் செலவின் அடிப்படையில் பெரும் சுமையைத் தாங்கும் அதே வேளையில், ஒரு விதிவிலக்கான உயர் செயல்திறனை அடையம் அபிவிருத்தி லொத்தர் சபையால் அமைக்கப்பட்டது. தொடர்ந்து மேம்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் திட்டங்கள் மற்றும் நிதி உத்திகள் மூலம், நெருக்கடியைச் சமாளிக்கவும் திருப்திகரமான முடிவுகளை அடையவும் முடிந்தது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் வரலாற்றில் முதல் தடவையாக பெற்ற நாம் ரூ. 3.2 பில்லியன் இலாபமானது அபிவிருத்தி லொத்தர் சபையின் வரலாற்றில் இதுவரை இல்லாத மிக உயர்ந்த பங்களிப்பாக காணப்படுவதுடன், இது மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது

## எங்கள் அணி

அபிவிருத்தி லொத்தர் சபையின் உத்வேகமிக்க வலுவான குழு எனது வெற்றி பற்றிய கதையின் பிரதான அம்சமாகும். எமது சந்தைப்படுத்தல் நிதி, தகவல் தொழில்நுட்பம், பெறுகைகள், விற்பனை, நிர்வாகம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த குழுக்கள் எமது இந்த பயணத்தில் பெரும் உதவியினை வழங்கும் தரப்பினர்களாகும். இவர்களின் இந்த புத்தாக்க சிந்தனை எமது உற்பத்திகளை முதன்மை நிலைக்கு இட்டுச் சென்று லொத்தர் சார்ந்த அனுபவத்திற்கு புதிய பரிமாணங்களை சேர்த்து சபையை உயர்நிலைக்கு உயர்த்தி வைத்துள்ளது.

## நிறுவனத்தின் சமூக பொறுப்பு

- 2022 இல் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபையின் விற்பனை முகவர்களின் குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்குவதற்காக ரூபா. 565,500 செலவிடப்பட்டது.
- மேலும் 2021 ஆம் ஆண்டில் பல்வேறு உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் கோவிட் வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொற்றுநோயால் இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விற்பனை முகவர்கள் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையியின் விற்பனை உதவியாளர்களுக்கு ரூ. 6,072,130 செலவிடப்பட்டது.
- நகரை அழகுபடுத்தும் கண்டி மாநகர சபையின் ஊழியர்களுக்கு அபிவிருத்தி லொத்தர் சபையினால் 100 சட்டைகள் வழங்கி வைக்கப்பட்டது.

## அனுசரணை வழங்குவதற்கான பங்களிப்பு

அபிவிருத்தி லொத்தர் சபை ருஹுனு கதிர்காம மகா தேவாலயத்தின் எசல பெரஹெராவிற்கு ரூ. 500,000, கண்டி ஸ்ரீ தலதா பெரஹெராவிற்கு ரூ. 2 மில்லியன், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே ரஜமஹா விகாரையில் வருடாந்த ஸ்ரீ தலதா மஹா பெரஹெரவிற்கு ரூ. 200,000 ம், பெல்லன்வில ரஜ மகா விகாரையின் 72வது வருடாந்த எசல பெரஹரவிற்கு ரூ. 200,000 இந்த மீளாய்வு வருடத்தின் போது நிதியுதவியாக அனுசரணையளித்தது.

## எதிர்காலக் கண்ணோட்டம்

அபிவிருத்தி லொத்தர் சபை யின் 40வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் புதிய வணிகச் சின்னம்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. செப்டம்பர் 9, 2022 (வெள்ளிக்கிழமை) அன்று, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு அதிர்'டத்தின் சின்னமான “வலம்புரி” என்ற பெயரில் புதிய லொத்தர் சீட்டு சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரபலம் காரணமாக இதை நாடுமுழுவதும் முடிவு செய்யப்பட்டது, மேலும் இந்த வெளியீடு எதிர்வரும் ஆண்டிலும் தொடரும். எவ்வாறாயினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட “வலம்புரி” லொத்தர் சீட்டை அதன் பிரபலம் காரணமாக நாடுமுழுவதும் அறிமுகப்படுத்த நிர்வாகம் முடிவு செய்தது. இது எதிர்வரும் ஆண்டிலும் தொடரும். நிர்வாக செலவு அச்சிடும் செலவு மற்றும் வரிகளின் அதிகரிப்பு காரணமாக 2023 ஆம் ஆண்டு முதல் டிக்கெட் விலையை அதிகரிக்க மூலோபாய முடிவு எடுக்கப்பட்டது.

## நிறைவுக் குறிப்பு

எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலுக்கு அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கும் கௌரவ நிதி அமைச்சருக்கும் திறைசேரியின் செயலாளருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியினை தெரிவிக்கின்றேன். கடந்த காலத்தில் போலவே தற்போதும் மிகவும் திறமையான முறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் எமது பணியாட்டொகுதியின் ஒத்துழைப்புடன் அறிவினைப் பெற்றுக்கொண்டும் அவற்றைப் பகிர்ந்து கொண்டும் எமது பல்வேறு பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிட்டியமை பெரும் அனுபவமாக அமைந்தது. எமது குழு ஒன்றினைந்து எங்கள் சமுதாயத்திற்கு உதவுவதுடன் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும் விசேட சேவையினை வழங்கியுள்ளதுடன் இடையறாமல் தொடர்ந்தும் இச் சேவைகள் வழங்கப்படுகின்றன. அனைத்து சீட்டிழுப்பு நடுவர்களுக்கும் சனாதிபதி நிதியத்தின் பணியாட்டொகுதிக்கும் மகாபொல உயர் கல்வி பொறுப்பு நிதியத்தின் பணியாட்டொகுதிக்கும் சந்தைப்படுத்தல் முகவர்களுக்கும் சந்தைப்படுத்தல் உதவியாளர்களுக்கும் மீள் விற்பனையாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் வங்கியாளர்களுக்கும் அனைத்து சேவை வழங்குநர்களுக்கும் மற்றும் பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர்கள், மற்றும் உதவி பொது முகாமையாளர்கள் உள்ளிட்ட எமது நிறைவேற்று பணியாட்டொகுதிக்கும் எனது விசேட நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், மேலதிக முயற்சியினை மேற்கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றி தமது பணி கடமைகளை சிறப்பாக நிறைவேற்றி எமது வெற்றிக்காக பங்களிப்பு வழங்குகின்ற அனைத்து பிரிவைகளையும் சேர்ந்த சகல பணியாளர்களையும்ட நாம் மறந்துவிடவில்லை. நாம் அபிவிருத்தி லொத்தர் சபையில் பணியாற்றுவதை அர்த்தமுடையதாக மாற்றுவதற்கு அவர்கள் எங்களுக்கு உண்மையிலேயே பெரும் ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்

மேலும், எமது சேவைகளுக்கு அனுசரணை வழங்கிய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது நன்றி உரித்தாவதுடன் அவர்களின் அனுசரணை கிடைக்காமல் போயிருந்தால் எமக்கு இந்த வெற்றியினை பெற்றுக்கொள்ள இயலாமல் போயிருக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், எமக்கு வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புக்காக கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட அவரின் திணைக்களத்திற்கு எமது நன்றியினை தெரிவிக்கின்றோம். இறுதியாக, இந்நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்காக எமது அனைத்து பங்கீடுபாட்டாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிப்பதுடன் எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக உங்களின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.



அஜித் குணரத்ன நாரகல
தலைவர் /பிரதான நிறைவேற்று அதிகாரி

# பணிப்பாளர் சபையின் மீளாய்வு

டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை வழங்குவதில் அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகிறது.

## முக்கிய செயல்பாடுகள்

ஜனாதிபதி நிதியம் மற்றும் மஹாபொல உயர்கல்வி அறக்கட்டளை நிதியத்திற்கு வருமானம் ஈட்டுவதே சபையின் பிரதான கொள்கை நடவடிக்கையாகும்.

## இந்த ஆண்டின் செயல்திறன் மதிப்பாய்வு

முன்னோருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் கூட, அபிவிருத்தி லொத்தர் ரூ. 3,211 மில்லியன் ஜனாதிபதி நிதியத்திற்கு வழங்கியது இது 2021 இல் வழங்கப்பட்ட பங்களிப்பை விட 12% அதிகமாகும். அபிவிருத்தி லொத்தர் சபையானது ரூ.19.7 பில்லியன் வருவாயை அடைய முடிந்தது, இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 26% அதிகரிப்பாகும்.

## பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR)

மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகள் ஆண்டு அறிக்கையின் செயல்பாட்டு மதிப்பாய்வு பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

## நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்கள் பொறுப்பு

விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை பிரதிபலிக்கும் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாவார்கள். இந்த நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கியல் நியமங்களின் தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## கணக்காய்வு அறிக்கை

ஜனநாயக சோசலிசத்தின் அரசியலமைப்பின் 154 வது பிரிவின் விதிகளின்படி, கணக்காய்வாளர் ஆணையாளர், அபிவிருத்தி லொத்தர் சபையின் கணக்காய்வாளர் ஆவார். இலங்கை குடியரசு மற்றும் 1997 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 14(3) பிரிவு. 31 டிசம்பர் 2022 இன் வபையின் நிதி அறிக்கைகள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையின் பக்கம் 62 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## கணக்கியல் கொள்கைகள்

சபையானது இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு (LKASs) இணங்க அவர்களின் நிதி அறிக்கைகளை தயாரித்தது. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பக்கம் 68 முதல் 74 வரை வழங்கப்பட்டுள்ளன.

## சபையுடனான ஒப்பந்தத்தில் சபை அங்கத்தவர்களின் ஆர்வம்

31 டிசம்பர் 2022 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்திலும் பணிப்பாளர்களுக்கு நேரடி அல்லது மறைமுக ஆர்வம் இருக்கவில்லை

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு

முகாமைக் குழுவின் துணைக் குழுவான கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு, நிறுவனத்தின் ஆளுகை மற்றும் இடர் மேலாண்மை அமைப்புகளை மதிப்பாய்வு செய்வதற்கும், உள் கட்டுப்பாட்டு செயல்முறையை கண்காணித்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு மற்றும் சட்டப்பூர்வ கணக்காய்வுகள் செயல்பாடுகளின் கண்ணோட்டம் ஆகியவற்றிற்கும் ஒட்டுமொத்த பொறுப்பைக் கொண்டுள்ளது. கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் அறிக்கை பக்கம் 60 முதல் 61 வரை கொடுக்கப்பட்டுள்ளது.

## சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்குதல்

பணிப்பாளர்கள் தங்களின் அறிவு மற்றும் நம்பிக்கையின்படி, சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையிலும் சபை ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

## சட்டரீதியான கொடுப்பனவுகள்

ஜனாதிபதி நிதி, அரசாங்க வரிகள் மற்றும் ஊழியர் வருங்கால வைப்பு நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக்கொடை ஆகியவற்றுக்கான அனைத்து சட்டப்பூர்வ கொடுப்பனவுகளும் சரியான நேரத்தில் செய்யப்பட்டுள்ளன என்பதை சபையானது உறுதிப்படுத்துகிறது.

ஐந்தொகை அறிக்கை நிகழ்வுகளுக்குப் பின்

நிதியாண்டின் இறுதிக்கும் இந்த அறிக்கையின் திகதிக்கும் இடைப்பட்ட இடைவெளியில் சரிசெய்தல் அல்லது வெளிப்படுத்துதல்கள் தேவைப்படும் எந்த ஒரு முக்கிய நிகழ்வுகளும் ஏற்படவில்லை என்று பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## நடப்பு அக்கறைகள்

சபையின் வளங்கள் அதன் செயல்பாடுகளைத் தொடர போதுமானவை என்று பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

எனவே, நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் அது நடப்பு அக்கறையின் அடிப்படையைப் பயன்படுத்தியுள்ளது.

சவால்களுக்கு மத்தியிலும் எமக்கு உதவியளித்த மேதகு சனாதிபதி அவர்களுக்கும் கௌரவ பிரதம அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் சவால்களுக்கு மத்தியிலும் எமது வருடாந்த இலக்கினை அடைந்து கொள்வதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய எங்கள் பணியாட்டொகுதிக்கும் பணிப்பாளர் சபையின் சார்பில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன். எனது நன்றி உரித்தாக வேண்டிய மேலும் பலர் இருப்பதுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு எனது உற்பத்திகளை விநியோகிப்பதற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் எமது விற்பனை அணிக்கும் குறிப்பாக விநியோகத்தர்களுக்கும், விற்பனை உதவியாளர்களுக்கும் மீள் விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இறுதியாக, அபிவிருத்தி லொத்தர் சபையின் மீது வைத்துள்ள நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்காக எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

திருமதி. ஜெனட் ஜயவர்தன
(சட்டத்தரணி)
பணிப்பாளர்

# பணிப்பாளர்கள் சபை – 2022



**இடமிருந்து வலமாக**

**செல்வி. கே.ஏ.எச்.சீ புபுதுசிறி**
பணிப்பாளர் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் நிதி அமைச்சு
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2021.06.28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்
*W.e.f 28.06.2021*

**திரு. டபிள்யு. ஏ. சரத்குமார**
திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி அமைச்சு,
மூத்த மேலதிக செயலாளர், சனாதிபதி அலுவலகம்,
செயலாளர், ஜனாதிபதி நிதியம்
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
*W.e.f 22.08.2022*

**திரு. அஜித் குணரத்ன நாரகல**
தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி
2021.12.16 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்
*W.e.f 16.12.2021*

**திருமதி. ஜெனட் ஜயவர்தன**
(சட்டத்தரணி)
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2020.01.15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில்
*W.e.f 15.01.2020*

**திரு. எஸ்.தி. கொடிகார (புகைப்படத்தில் இல்லை)**
வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்,
அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர்
*W.e.f 28.06.2022*

# தற்போதைய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்



**திரு. அஜித் குணரத்ன நாரகல**
தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி



**திரு. டபிள்யு. ஏ. சரத்குமார**
செயலாளர், ஜனாதிபதி நிதியம்
திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதி அமைச்சு,
பணிப்பாளர், அபிவிருத்தி
லொத்தர் சபை



**செல்வி. கே.ஏ.எச்.சீ புபுதுசிறி**
பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள்
திணைக்களம் நிதி அமைச்சு,
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2021.06.28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு
வரும் வகையில



**திருமதி. ஜெனட் ஜயவர்தன**
(சட்டத்தரணி)
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை
2020.01.15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு
வரும் வகையில்

# அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையின் விபரம்

### திரு. என்.கே. அஜித் குணரத்ன நரகல
தலைவர், / பிரதான நிறைவேற்றதியாரி
அபிவிருத்தி லொத்தர் சபை

நியமனம் செய்யப்பட்ட தேதி
16 டிசெம்பர் 2021
கல்வி, திறன்கள் மற்றும் அனுபவம்
- மாஸ்டர் ஆ/ப் பிசினஸ் அட்மினிஸ்ட்ரேஷன், மகாத்மா காந்தி பல்கலைக்கழகம் இந்தியா, 2015.
- நிகழ்வுகள் முகாமைத்துவம் முதுகலை டிப்ளமோ, தேவன்ரீ பல்கலைக்கழகம், இந்தியா
- கட்புல அரங்கேற்றக் கலைகள் இளங்கலை பட்டம் (சிறப்பு) கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம், இலங்கை
- வணிக முகாமைத்துவ டிப்ளோமா லலித் அதுலத் முதலி தொழிற்பயிற்சி நிலையம் இலங்கை
- பொதுத்துறை நிறுவனங்களில் தலைமை பதவிகள் மூலம் பொதுத்துறை செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளில் விரிவான அனுபவம்.
- தனியார் துறை நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்தல், வணிகநாம உருவாக்கல், சந்தை விரிவாக்கம் ஆகியவற்றில் தலைமைத்துவம்.

ஏனைய நியமனங்கள்
- பணிப்பாளர் சபை அங்கத்தவர்:
  - சுயாதீன தொலைக்காட்சி அழலவரினை லிமிடெட்
  - பீசீசீ லங்கா லிமிடெட்
- ருஹுணு பல்கலைக்கழகத்தில் பேரவை உறுப்பினர்
- களனிப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளர்
- விஃவல் மற்றும் பெர்/பார்மிங் ஆர்ட்ஸ் பல்கலைக்கழகத்தில வருகை விரிவுரையாளர
- லக்சுரி கேரிங் (பிரைவேட்) லிமிடெட்டின் நிர்வாக இயக்குனர்

முந்தைய நியமனங்கள்
- லங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம்
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயல்பாட்டு இயக்குனர்
- கொழும்பு டெலிவிஷனில் பிரதம நிறைவேற்று அதிகாரி

### திரு.ஹ.யு. சரத் குமார
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை

நியமனம் செய்யப்பட்ட தேதி
22 ஆகஸ்ட்.2022
கல்வி, திறன்கள் மற்றும் அனுபவம்
- BSc.in மேலாண்மை மற்றும் மதிப்பீடு, ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்
- லங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) பொது முகாமைத்துவத்தில் முதுகலைப் பட்டம் (முதுகலைபபட்டம்))
- லங்கை கணக்காளர் சேவையில் 36 வருடங்களுக்கும் மேலான அனுபவம்

ஏனைய நியமனங்கள்
- ஜனாதிபதி நிதியத்தின், செயலாளர்.
- நிதி அமைச்சு, திறைச்சேரியின் துணைச் செயலாளர்,

முந்தைய நியமனங்கள்
- பேரிடர் மேலாண்மை அமைச்சகத்தின் தலைமை கணக்காளர்
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தலைமை கணக்காளர்
- பிரதமர் அலுவலகம், தலைமை நிதி அதிகாரி

### திரு. சிசிர திஸ்ஸ குமார கொடிகார
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை

நியமனம் செய்யப்பட்ட தேதி
28 ஜூன் 2022
கல்வி, திறன்கள் மற்றும் அனுபவம்
- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் 2ஆம் வகுப்பு உயர்தரப் பிரிவில் புவியியல் பாடத்தில் பி.ஏ.(ஹானர்ஸ்).
- அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளூராட்சி படிப்புகளில் முதுகலை டிப்ளோமா, கொழும்பு பல்கலைக்கழகம்
- பொருளாதாரத்தில் முதுகலை வணிகம், நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியலில் முதுகலை டிப்ளோமா
- சட்ட இளங்கலை (L.L.B), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஏனைய நியமனங்கள்
- வர்த்தகம், வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர்

முந்தைய நியமனங்கள்

| | |
|---|---|
| செயலாளர் | அரச வீட்டுவசதி அமைச்சகம் |
| செயலாளர் | தேசிய பாரம்பரியம், கலைநிகழ்ச்சிகள் மற்றும் கிராமப்புற கலைகளை மேம்படுத்துவதற்கான இராஜாங்க அமைச்சு |
| தலைவர் | தேசிய மனித வள சபை, பொது சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| செயலாளர் | மூகப் பொலிஸ் சேவைகளுக்கான இராஜாங்க அமைச்சு |

### செல்வி கே.ஏ.எச்.சி. புபுதுசிற
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை

நியமனம் செய்யப்பட்ட தேதி
28 ஜூன் 2021
கல்வி, திறன்கள் மற்றும் அனுபவம்
- BSc - களனி பல்கலைக்கழகம்
- MSc (உயிர்தொழில்நுட்பவியல்) - பேராதனை பல்கலைக்கழகம்
- MA (பொருளாதாரம்) - களனி பல்கலைக்கழகம்
- MA (கொள்கை பொருளாதாரம்) - வில்லியம்ஸ் கல்லூரி, அமெரிக்கா
- பொது நிதி, நிதிக் கொள்கை மற்றும் வெளிப்புற மேம்பாட்டு உதவி ஆகியவற்றில் பணி அனுபவம்

ஏனைய நியமனங்கள்
இயக்குனர், வெளிவிவகாரத் துறை

### திருமதி ஜெனட் ஜெயவர்தன
பணிப்பாளர், அபிவிருத்தி லொத்தர் சபை

நியமனம் செய்யப்பட்ட தேதி
15 ஜனவரி 2020
கல்வி, திறன்கள் மற்றும் அனுபவம்
- டுடுடீ- சட்ட பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்
- 22 வருட அனுபவம்

ஏனைய நியமனங்கள்
தலைவர் – குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம்
(அக்டோபர் 2022 முதல் இன்றுவரை)
முந்தைய நியமனங்கள்
- சட்ட ஆலோசகர் - வடமேல் மாகாணம், (2004 - 2010)
- NICT தலைவர் - ஆண்டு 2019

# முகாமைத்துவக் குழு



1. திரு. டி.டி.சி. தம்மிந்த – பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) 2. திரு.டபிள்யூ.கே.ஏ.ஏ. ஜயரத்ன பொது முகாமையாளர் 3. திரு. அஜித் குணரத்ன நாரகல தலைவர் / பிரதம நிறைவேற்று அதிகாரி 4. செல்வி டபிள்யூ.எ.வீ.சீ. சோமரத்ன பிரதி பொது முகாமையாளர் (நிதி) 5. திரு. டி. கசுன் ஜயசூரிய உதவி பொது முகாமையாளர் (நிதி)



6. திரு. சி.சி. ஜலப்பெரும உதவி பொது முகாமையாளர் (விற்பனை), பதில் கடமை 7. திரு. எஸ்.எம்.ஏ வசந்த உதயகுமார உள்ளக கணக்காய்வாளர் 8. கலாநிதி திருமதி. அசங்கா எஸ். குணசிங்க உதவி பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) 9. திரு. நிஷான் பெரேரா உதவி பொது முகாமையாளர் (நிதி) 10. திரு. பீ.டி.யூ மலிந்த உதவி பொது முகாமையாளர் (பெறுகைகள்) 11. திரு. ரோஹன பிரசாத் ரணசிங்க உதவி பொது முகாமையாளர் (மனித வள மற்றும் நிர்வாகம்)

# கனிஷ்ட முகாமையாளர்கள்



1. திரு. ஜீ.ஏ.ஆர்.எஸ். ரணதுங்க பிராந்திய முகாமையாளர் 2. திரு. ஈ.டி.ஐ.என்.எஸ். அபேரத்ன – நிர்வாக அதிகாரி 3. திரு. ஜே.எம்.டீ.ஏ கிறிசாந்த தலைமை பாதுகாப்பு அதிகாரி 4. திரு. எம்.பி.எம்.என்.கே. பலகல்ல பிராந்திய முகாமையாளர் 5. திரு. ஐ.டி.பத்ம குமாரசிரி பிராந்திய முகாமையாளர் 6. திரு. எம்.கே.ஏ.ஐ. கமல்சிறி பிராந்திய முகாமையாளர்



7. திரு. சி.ஜே.பீ. ஜயவர்தன பிராந்திய முகாமையாளர் 8. திரு. என்.வி. இந்திக உபுல் நிதி அதிகாரி 9. திருமதி. எம்.எல் கௌரி கௌஷல்யா பிராந்திய முகாமையாளர் 10. திரு. ஆர்.எம்.யு.எஸ். குமார பிராந்திய முகாமையாளர் 11. திரு. டீ.எம்.பி.எல். மஹிந்த பிராந்திய முகாமையாளர் 12. திரு. ஆர்.ஏ. சுனில் ரத்நாயக்க பிராந்திய முகாமையாளர்



13. திருமதி. ஆர்.டி.சி. ராஜபக்ஸ நிதி அதிகாரி 14. திரு. பி.ஏ.சி.ஜே. கருணாரத்னா பெறுகைகள் அதிகாரி 15. திருமதி. சி.என். தெவரப்பெரும மனித வள அதிகாரி 16. திரு. பிரசன்ன கோகுலா பர்னாந்து போக்குவரத்து அதிகாரி 17. திருமதி. ஏ.டபிள்யூ.ஜீ. ரூபசிங்க நிதி அதிகாரி 18. திரு. யு.ஜி. இலேபெரும கணினி முறைமை பகுப்பாய்வாளர் 19. திருமதி. எம்.எல்.என். குணசேகர நிதி அதிகாரி 20. திருமதி. ஜி.டி.எஸ். பிரேமதிலக சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் அதிகாரி

# தொழிற்பாட்டு மீளாய்வு

## 2022ம் ஆண்டின் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான விசேட விபரங்கள்

2021ம் ஆண்டின் விற்பனையுடன் ஒப்பிடுகையில் 2022 ம் ஆண்டு ஆரம்பம் முதல் முதலாம் காலாண்டு முடிவடையும் வரை விற்பனையில் சிறப்பான அதிகரிப்பு காணப்பட்டபோதும், இரண்டாம் காலாண்டு ஆரம்பம் முதல் விற்பனை பின்னடைவு காட்டப்பட்டது. அதற்கான பிரதான காரணியாக அக் காலகட்டத்தில் நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி அமைந்தது. இதன் காரணமாக பல நாட்கள் நாட்டில் அவசர கால நிலை அமுல்படுத்தப்பட்டமையினால் சீட்டிழுப்புக்களையும் சரியாக மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறே அக் கால கட்டத்தில் அதிகூடிய பணவீக்க நிலை காரணமாக நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்பட்டதானால் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டு விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடும் விற்பனை வலைப்பின்னல் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. விசேடமாக நடமாடும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்ட விற்பனை முகவர்கள் விற்பனையில் இருந்து விடுபட காரணமாக அமைந்தது. மேலும் லொத்தர்களுக்குரிய கேள்வி விரைவாக குறைந்தமையினால் போதியளவு வருமானம் கிடைக்காமையினால் விற்பனையாளர்களும் விற்பனையிலிருந்து விடுபட்டனர்.

இந் நிலையினால் எமது விற்பனையில் பாரிய சரிவு ஏற்பட்டதுடன் இவ் ஆண்டின் இறுதிக் காலாண்டில் விற்பனை குறிப்பிட்டளவு நல்ல நிலைக்கு திரும்பியது. 25 மில்லியன் ரூபாய் விற்பனை இலக்கினை அடைய முயற்சித்த போதும் குறித்த விடயங்கள் காரணமாக 19 மில்லியன் ரூபாய் விற்பனை இலக்கினை எட்டி திருப்தியடைய நேரிட்டது. இந்நிலையிலும் எமது இலாபமான 03 மில்லியன் ரூபாயினை அடைய காரணமாக அமைந்தது, நிறுவனத்தின் செலவுகளை முறையாக முகாமைத்துவம் செய்தமையாகும்.

அவ்வாறே ஆண்டின் நான்காவது காலாண்டின் போது விசெடமாக மேற்கொள்ளப்பட்ட விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள், விற்பனை முகவர் சந்திப்புக்கள் மற்றும் அவர்களுக்கு நிதிசார் உதவிகள் வழங்கப்பட்டமை காரணமாக விற்பனையினை 19 பில்லியன் வரை அதிகரித்துக் கொள்வதற்கு எம்மால் இயன்றது. இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாரிய முன்னேற்றமாகும்.

2022ம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை பின்வரும் விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல் மூலம் விற்பனையினை அதிகரிக்க முடிந்தது.

## 01. விற்பனை மேம்படுத்தல் செயற்திட்டம்

### ராசி அதிர்ஷ்டம்

ராசி அதிர்ஷ்டம் லொத்தருக்காக "சுப்பர் தன யோகம்" எனும் பெயரில் 2022 ஜனவரி 28ம் (வெள்ளிக்கிழமை) விசேட சீட்டிழுப்பொன்று நடைபெற்றது. இவ் விசேட சீட்டிழுப்பின் போது 5.3 மில்லியன் லொத்தர்கள் விற்பனை ஆகியது. இப் பாரிய விற்பனையின் காரணமானக இவ் ஆண்டில் "சுப்பர் தன யோகம்" எனும் பெயரில் இரு சீட்டிழுப்புக்கள் பெபரவரி மற்றும் ஏப்ரில் மாதங்களில் நடைபெற்றது. அதன் போது முறையே 3.3 மில்லியன் மற்றும் 3.5 மில்லியன் லொத்தர்கள் விற்பனையாகியது.

மேலும் ராசி அதிர்'டம் லொத்தரினை சந்தையின் மிகவும் பிரபல்யமானதும் முதன்மை லொத்தராகவும் கொண்டுவரும் வகையில் 2022 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான மாதங்களில் விற்பனை முகவர்கள் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அனைத்து ராசி அதிர்'டம் லொத்தர்களுக்கும் 50 சதம் மேலதிக ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டதுடன் அதன் காரணமாக ராசி அதிர்'டம் லொத்தரின் விற்பனை 17 மூ அதிகரித்தது.

### சுப்பர் போல்

சுப்பர் போல் லொத்தரின் யாதாயினும் ஒரு இலக்கத்துடன் ஆங்கில எழுத்திற்கு வழங்கப்பட்ட 40 ரூபாய் 100 ரூபாய் வரை அதிகரித்தல் 2022 நவம்பர் மாதம் 11 ம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன் அதனை முன்னிட்டு 2022 நவம்பர் மாதம் 16 ம் திகதி முதல் 2022 நவம்பர் மாதம் 31 ம் திகதி வரை "சுப்பர் போல் சுப்பர் சான்ஸ்" எனும் பெயரில் சீட்டிழுப்புக்கள் சில மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய வழமையான பரிசுகளுக்கு மேலதிகமாக நாளாந்தம் மேலதிக சீட்டிழுப்பொன்று மேற்கொள்ளப்பட்டு ரூ. 100 மற்றும் ரூ. 500 பரிசுகள் பல வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

### கப்ருக

கோடிபதி கப்ருக பெயரில் ஆரம்ப பரிசுப்பொதி ரூ.7.5 கோடியாக இருந்த கோடிபதி கப்ருக 2021 டிசம்பர் மாதம் ரூ.12 கோடியில் ஆரம்பமாகும் மிகப் பெரிய பரிசுப்பொதியுடனும் மேலும் பல கோடிபதி மற்றும் இலட்சாதிபதி பரிசுப்பொதிகளுடன் மீண்டும் வெளியிடப்பட்டது. கப்ருக லொத்தரின் அதி கூடிய பரிசுப்பொதியினை மேம்படுத்தும் முகமாக 2022 செப்டெம்பர் மாதம் 29 ம் திகதி (வியாழக்கிழமை) "கப்ருக பவர் ப்ளே" எனும் பெயரில் விசேட சீட்டிழுப்பொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இச் சீட்டிழுப்பின் மூலம் 2.7 மில்லியன் லொத்தர்கள் விற்பனை செய்யப்பட்டது. கப்ருக லொத்தருக்குரிய அதிக கேள்வியின் காரணமாக அதனை மென்மேலும் சந்தையில் பிரபல்யப்படுத்தும் முகமாக 2022 டிசம்பர் மாதம் 30 ம் திகதி (வெள்ளிக்கிழமை) "கப்ருக பவர் ப்ளே" எனும் பெயரில் விசேட சீட்டிழுப்பொன்ற மேற்கொள்ளப்பட்டதுடன் இச் சீட்டிழுப்பில் 4.1 மில்லியன் லொத்தர்கள் விற்பனை செய்யப்பட்டது

### சசிரி

"சசிரி" லொத்தரினை மேம்படுத்தும் வண்ணம் 2022 மார்ச் மாதம் 15 ம் திகதி (செவ்வாய்க்கிழமை) "சசிரி இலட்சாதிபதி அதிரஷ்டம்" எனும் பெயரில் விசேட லொத்தர் ஒன்று சீட்டிழுக்கபட்டதுடன் இச் சீட்டிழுப்பின் போது 1.3 மில்லியன் லொத்தர்கள் விற்பனை செய்யப்பட்டது. நாளொன்றில் அதிகளவான இலட்சாதிபதிகளை உருவாக்கும் சசிரி லொத்தர் மூலம் 2022 ம் ஆண்டில் 1596 இலட்சாதிபதிகள் உருவாக்கபட்டனர்.

### வலம்புரி

2022 செப்டெம்பர் மாதம் 09 ம் திகதி (வெள்ளிக்கிழமை) அதிர்ஷ்டத்தின் வெற்றி நாதம் “வலம்புரி” எனும் பெயரில் 50 ரூபாய் விலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாடிக்கையாளர்களை இலக்கு வைத்து சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இவ் லொத்தர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை சீட்டிழுக்கப்படவுள்ளது. இதன் முதல் சீட்டிழுப்பு 2022 அக்டோபர் மாதம் 28 ம் திகதி (வெள்ளிக்கிழமை) சீட்டிழுக்கப்பட்டதுடன் அதன்போது 1.1 மில்லியன் லொத்தர்கள் விற்பனையாகியது.

## 03. 2022ம் ஆண்டில் புதிய விற்பனை விநியோக முகவர்கள் மற்றும் விற்பனை முகவர் நியமித்தல்

| மாவட்ட இலக்கம் | மாவட்டம் | விற்பனை விநியோக முகவர்கள் | விற்பனை முகவர்கள் |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 02 | 09 |
| 02 | களுத்துறை | | 03 |
| 03 | கண்டி | | 06 |
| 04 | மாத்தளை | | 02 |
| 05 | நுவரெலியா | 01 | 02 |
| 06 | காலி | | 04 |
| 07 | மாத்தறை | 01 | 04 |
| 08 | அம்பாந்தோட்டை | | 01 |
| 09 | யாழ்ப்பாணம் | | |
| 10 | மன்னார் | | |
| 11 | வவுனியா | | 01 |
| 12 | மட்டக்களப்பு | | |
| 13 | அம்பாறை | | 01 |
| 14 | திருகோணமலை | | 03 |
| 15 | குருநாகல் | | 06 |
| 16 | புத்தளம் | | 01 |
| 17 | அநுராதபுரம் | 01 | 03 |
| 18 | பொலொன்னறுவை | | |
அபிவிருத்தி லொத்தர் சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனித்துவமான சில இடர் வரும் நிலைகளுக்கு உள்ளாகின்றது.

### பரிசுகளை வழங்குவதில் இடர் வரும் நிலை

அனைத்து மொத்த மட்டத்திலும் பரிசுகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவு விகிதமொன்றை பேணிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விடயத்தில் காசுப் பாய்வுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய சம்பவங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காரணமாக அதிக விலை விகிதமொன்று காணப்படுவதற்கான இடர் வரும் நிலை தோன்றக்கூடும். மேற்படி இடர் வரும் நிலையினை கையாளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை அச்சகங்களில் இருந்து காப்புறுதி ஒன்றையும் பெற்றுக் கொள்ளுகின்றது.

### பொருளாதார இடர் வரும் நிலை

அபிவிருத்தி லொத்தர் சபையின் வாடிக்கையாளர்களின் கொள்வனவு போக்குகள் நாட்டில் காணப்படும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களினால் ஏற்படுத்தப்படும் உந்துசக்தியின் மீது தங்கியிருக்கின்றது.

### நிதிசார் இடர் வரும் நிலை

வினைத் திறனற்ற காசு பாய்வு முகாமைத்துவம் மற்றும் நிதி தகவல்கள் ஆகியவற்றின் இடர் வரு நிலை ஊடாக நிறுவனத்தின் இலாபத்தன்மை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றிற்கு குந்தகமான நிலைமை ஏற்படுத்தக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை உரிய காப்புறுதி ஏற்பாடுகளை உறுதி செய்வதன் ஊடாக நிறுவன முழுவதிலும் கிரயத்தை கட்டுப்படுத்தும் மூலோபாயங்களை ஒருங்கிணைத்தல் போன்ற சம்பிரதாயமான நிதி இடர் வரும் நிலை முகாமைத்துவ நடைமுறைகளை பயன்படுத்துகின்றது.

### திரவத் தன்மை சார்ந்த இடர் வரும் நிலைகள்

உயர் மட்டத்திலான பரிசுகளை முன்கூட்டியே ஈட்டிக் கொள்வதன் ஊடாக நிதி திரவநிலை தொடர்பான இடர் வரும் நிலைகள் ஏற்கடக்கூடும். இவ்வாறான இடர் வரும் நிலைகளை இயன்றளவு குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி சொத்துக்களை உயர்மட்டத்தில் பேணி வருகின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தீர்க்கவேண்டிய வேண்டியவைகளை தீர்ப்பதற்கான ஆற்றலை கொண்டு இருந்தபோதிலும் சபையினால் செலுத்தப் படுவதற்கு கடப்பாடு கொண்டுள்ள கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது அவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு போதியளவு நிதி வளங்களை பேணி வருவதற்கு அல்லது உருவாக்கிக் கொள்வதற்கு இயலாதவிடத்து அல்லது கணிசமானளவு பாதகமான நிலையின் கீழ் அவற்றைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் போது மாத்திரம் திரவ.

### தொழிற்படுத்தல் இடர் வரும் நிலை

முறைமைகள் செயலிழந்து போகுதல் தனி நபர்களினால் ஏற்படக்கூடிய தவறுகள் குற்றவியல் சார்ந்த செயற்பாடுகள் அல்லது உள்ளக முறைமைகள் செயலிழப்புக்கு உள்ளாகுதல் ஆகியவை காரணமாக ஏற்படக்கூடிய நட்டங்கள் தொழிற் படுத்தல் இடர் வரும் நிலையின் கீழ் வருகின்றது. அவ்வாறான நிலைமைகளின் காரணமாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கைக்கும் நிறுவனத்தின் நன் மதிப்பிற்கும் பாதகமான நிலைமைகள் ஏற்படக்கூடும். தொழிற்படுத்தல் இடர் வரும் நிலையினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ச்சியாக உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துகின்றது. நிறுவன ரீதியிலான இடர் வரும் நிலைகளில் ஊடாக ஏற்படும் அச்சுறுத்தல்களை இயன்றளவு குறைப்பதற்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் முகாமைத்துவத்தினால் தொழிற்படுத்தல் கூறுகள், வணிக செயன்முறைகள் மற்றும் பாரிய அளவிலான கூறுகள் தொடர்பாக தொடர்ச்சியாக இடர் வருநிலை தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

### வணிக இடர் வரும் நிலை

வணிக இடர் வரும் நிலை மூலோபாய மற்றும்/ அல்லது நற்பெயர் சார்ந்த காரணங்களினால் விளையும் கிரயத்தின் அடிப்படையுடன் ஒப்பிடுகையில் ஏற்படக்கூடிய வருமான பற்றாக்குறைக்கு ஏதுவானதாகும். ஏனைய மேலதிக விடயங்களை நோக்குகையில் வெளி வாரியான பேரண்ட பொருளாதார சூழல் அபிவிருத்தி லொத்தர் சபையினால் தெரிவு செய்யப்படுகின்ற மூலோபாயம் மற்றும் சபையானது தொழிற்படும் சந்தைக்குள் அதற்கு காணப்படும் நற்பெயர் சபையின் வருமானத்தை.

### நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலை

பங்குதாரர்கள் மத்தியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் நற்பெயருக்கு பாதகமான நிலை ஏற்படுதல் காரணமாக நற்பெயருக்கு இடர் வரும் நிலை ஏற்படக்கூடும் என்பதுடன் அதன்மூலம் வணிகத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் உற்பத்தியினை மேற்கொள்வதற்கும் உள்ள ஆற்றல் பாதிக்கப்படுகின்றது. நம்பகத்தன்மை புரிதல் மற்றும் வணிக ரீதியிலான தொடர்புகள் வீழ்ச்சி அடைவதன் ஊடாக அவ்வாறானதொரு பாதக நிலைமை ஏற்படக்கூடும்.

அபிவிருத்தி லொத்தர் சபை கட்புல ஊடகங்கள் மற்றும் பொது நலன் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுவதன் காரணமாக சபை கணிசமானளவு நற்பெயர் சார்ந்த இடர் வரும் நிலைக்கு உள்ளாகின்றது. இந்த இடர் வரும் நிலையை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்தி லொத்தர் சபை பொது நலனை தக்கவைத்துக் கொள்வதற்காக பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் சணிக்கங்களை நடைமுறைப்படுத்துவதுடன் பெருமளவில் முறைமை சார்ந்த வெளிப்படைத்தன்மையை பின்பற்றி செய்யப்படுகின்றது.

### சட்டம் சார்ந்த இடர் வரு நிலைகள்

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக மேற்கொள்ளப்படக் கூடிய எதிர்கால சட்ட நடவடிக்கைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தவறும் பட்சத்தில் சட்டம் சார்ந்த பாதக நிலைமைகள் ஏற்படக்கூடிய இடர் வரும் நிலை அதிகரிக்கக்கூடும். அபிவிருத்தி லொத்தர் சபை அங்கீகாரமுடைய சட்ட தொழில்வாண்மையாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று அவ்வாறான நடவடிக்கைகளை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இடர்வரு நிலைகள் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற திட்டவட்டமான தும் காலோசிதமானதுமான தகவல்கள் அபிவிருத்தி லொத்தர் சபையின் தொழிற்பாட்டு செயல்முறைகளின் அடிப்படை அம்சமாகத் திகழ்கின்றது. அபிவிருத்தி லொத்தர் சபை தனது தகவல் தொழில்நுட்ப முறைமையை மேம்படுத்துவதற்கு செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி உள்ளது.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

2022 டிசம்பர் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டிற்கான எமது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் நாம் சமர்ப்பிக்கின்றோம்.

## கணக்காய்வுக் குழுவினர்

கணக்காய்வுக் குழு பின்வரும் நான்கு (04) நிறைவேற்று பதவியல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது

| | |
|---|---|
| திரு. டப்ள்யூ.ஏ. சரத்குமார் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தலைவர |
| செல்வி கே.ஏ.எச். சீ.புபுதுசிறி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர |
| திருமதி ஜெனட் ஜயவர்தன | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர |
| திரு. எஸ்.தி. கொடிகார | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அங்கத்தவர |

பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் - நிதி உள்ளகக் கணக்காய்வாளர், உதவி பொது முகாமையாளர் மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் ஏனைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல் கட்டாயமானதாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் கணக்காய்வு அதிகாரி இக்குழுவில் அவதானிப்பாளராக இக்கூட்டங்களில் பங்கேற்பார்.

## கணககாய்வு குழுவின் வகிபாகம்

பங்கீட்டாளர்களின் கரிசனைகளையும் சபைக்கு சொந்தமான சொத்துக்களையும் பாதுகாத்து கொள்வதற்கு அபிவிருத்தி லொத்தர் சபை வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை பேணி வருதல் வேண்டும். நிதி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் விடுக்கப்படும் வழிகாட்டுதல்களையும் குழு பின்பற்றுகின்றது. 20202 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கணக்காய்வு குழுவினால் அதன் பிரதான பொறுப்புகளுக்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.

## நிதி அறிக்கையிடல்

ஆண்டுக்கான நிதி கூற்றுகளை வெளியிடுவதற்கு முன்னர் கூற்றுகளின் இசைந்தொழுகும் தன்மையையும் முழுமையையும் ஆராய்ந்தறிதல் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள முக்கியமான நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்தல். கணக்கீட்டு நியமங்கள் குறிப்புகள் வழக்கங்கள் தீர்மானங்கள் தேவைப்படுகின்ற பிரதான துறைகள் மற்றும் சட்ட அத்துடன் ஒழுங்குறுத்தல் தேவைகளுக்கு இசைந்தொழுகுவதை மீளாய்வு செய்தல் இதில் உள்ளடங்குகின்றன. நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதனூடாக கண்டறியப்பட்ட விடயங்களை மீளாய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தது.

## உள்ளக கணக்காய்வு

அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு உள்ளக கணக்காய்வு தொடர்பான காலத்துக்குரிய கணக்காய்வு அறிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்த உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் வாயிலாக சபையின் இயங்கு நிலையில் காணப்படும் முறைமைகள் மற்றும் நடவடிக்கை முறைகளில் உள்ள குறைபாடுகள் வலியுறுத்தப்பட்டு சுட்டிக்காட்டப் படுவதுடன் விதப்புகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் தேவையான சந்தர்ப்பங்களில் தற்போது உள்ள நடைமுறைகள் மற்றும் செயல் ஒழுங்குகளை மேம்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு குழுவுக்கு முன்னேற்றம் அறிக்கை இடப்படுகின்றது. கணக்காய்வு குழுவிற்கு உள்ளக கணக்காய்வு மூலம் தொடர்ச்சியாக அறிக்கைகள் கிடைப்பதுடன் அக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமும் கண்டறியப்பட்ட பிரதான விடயங்கள் தொடர்பான ஒரு சாராம்சமும் மேற்படி அறிக்கையில் உள்ளடங்குகின்றது. முகாமைத்துவத்தின் கருத்துக்களும் அதில் ஒரு பகுதியாக அமைவது உடன் கணக்காய்வின் மூலம் அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளுக்கு காரணமாக அமையும் அடிப்படை விடயங்கள் மட்டும் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளும் குழுவினால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

## இடர்நிலை முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகள்

உள்ளக கணக்காய்வினதும் அரச கணக்காய்வினதும் உதவியுடன் குழு சபையின் தொழிற்படுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் நடைமுறைகளின் பயனுறுதியை மதிப்பீடு செய்வதுடன் அவற்றின் செலவு, வருமான செயன்முறைகள் மூலதன செலவினத்திற்காக அனுமதி வழங்கும் வரம்புகள், கையொப்பமிடும் அதிகாரிகள், தகவல் தொழில்நுட்ப உள்ளீடுகளின் கட்டுப்பாடு மற்றும் விருத்தி செய்தல், தாபனத்தின் கட்டமைப்பு, கொள்கைகள் கடமைகளை ஒதுக்கிக் கொடுத்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுகள் உள்ளடங்குகின்றன. சபையின் நிதி நிலை கூற்றில் திரவத் தன்மை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டது. அங்கு இனங்காணப்பட்ட குறைபாடுகள் தேவையான மேம்படுத்த ளுக்கான பரிந்துரைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்படுகின்றது. அரசாங்க கோப் குழுவினால் கொடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் மீது குழு விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

## நடாத்தப்பட்ட கணக்காய்வு குழு கூட்டங்களின் எண்ணிக்கை

2022 ஆம் ஆண்டில் 4 கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் அதற்கு வருகை தந்தவர்கள் பின்வருமாறு

| பணிப்பாளரின் பெயர் | வருகை | Excused |
|---|---|---|
| திரு. டப்ள்யூ.ஏ. சரத்குமார் | 02/02 | Nil |
| செல்வி கே.ஏ.எச்.சீ.புபுதுசிறி | 04/04 | Nil |
| திரு. ரவீந்திர ஜே விமரவீர | 01/01 | Nil |
| திருமதி ஜெனட் ஜயவர்தன | 04/04 | Nil |
| திரு. எஸி கொடிகால | 03/03 | Nil |
| திருமதி . ஜே.எம் பத்ராணி ஜயவர்தன | 01/01 | Nil |

திரு. டப்ள்யூ.ஏ. சரத்குமார்
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

# நிதி அறிக்கை


சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை | 42

கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | 46

விரிவான வருமானக் கூற்றின் கணக்கு விபரம் | 55

நிதி நிலைக் கூற்று | 56

காசுப் பாய்வுக் கூற்று | 57

உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று | 58

கணக்கீட்டு கொள்கைகள் | 59

பிரிவுசார் அறிக்கை | 64

இறுதி கணக்குகளுக்கான குறிப்புகள் | 66

பத்தாண்டு கால பொழிப்பு | 76

# சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

**பீயூ.ஆர்/எவ்/டீஎல்பீ/எவ்ஏ/1/22/14** **2023 மே 31**

**தலைவர்,**

**அபிவிருத்தி லொத்தர் சபை.**

**அபிவிருத்தி லொத்தர் சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மேற்படி அறிக்கை மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது.

**டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

பிரதிகள்: செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

**பீயூ.ஆர்/எவ்/டீஎல்பீ/எவ்ஏ/1/22/14** **2023 மே 31**

தலைவர்,
அபிவிருத்தி லொத்தர் சபை.

**அபிவிருத்தி லொத்தர் சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, சபையின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்**

(i) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக கடந்த வருடங்களில் நடைமுறைப் பொறுப்புகளாக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 13,793,093 தொகை மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மீள்மதிப்பீடு செய்யும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்குரிய வகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் ஆகிய இரு சொத்து வகுப்புகளுக்குரிய ரூபா 56,204,125 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்களில் ரூபா 11,707,714 தொகையான சொத்துக்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 44,496,411 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் ஆகியவை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 81,790,967 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்கிட்டு குறைபாடுகள்**

(i) தற்போது நிர்மாணிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள பணிகளுக்காக திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 1,728,884 கூட்டுத்தொகையான செலவினங்களுக்கு உரிய கணக்கீட்டு சீராக்கங்களை மேற்கொள்ளாது 08 வருடங்களாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ii) சபையின் 2022 ஆம் ஆண்டின் வருமான வரி செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது முதல் அரையாண்டின் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின்

அடிப்படையில் 24 சதவீதம் மற்றும் இரண்டாவது அரையாண்டில் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீதம் உரித்தாக்கிக் கொள்ளப்படவேண்டிய போதிலும் சபையினால் முழு வருடத்தினதும் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீத வரி விதம் உரித்தாக்கபட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 6,127,600 இனால் அதி-கரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் அந்த அளவினால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

(iii) நடைமுறையல்லாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,095,000 பெறுமதியான கப் வண்டி ஒன்று முன்னால் தலைவரினால் எடுத்து செல்லப்பட்டமையால் பௌதிகரீதியாக சபையிடம் காணப்படவில்லை.

(iv) 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் லொத்தர் விற்பனை வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 840,343 கூட்டுத்தொகையான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்படாது மீள் செலுத்தல்களாக கருதி மீளாய்வாண்டிலும் குறித்த பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு பணம் செலுத்தப்பட்டு மீள் அனுப்பல்களாக ரூபா 616,743 மற்றும் வாகன பரா-மரிப்பு செலவினமாக ரூபா 223,600 எனுமாறு கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 840,343 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு உரிய கணினி மயப்படுத்தப்பட்ட மூலப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட முறையே ரூபா 4,107,599 மற்றும் ரூபா 2,523,988 தொகையான கணினி மற்றும் அலுவலக உபகரண உருப்படிகளின் அளவானது கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டு பெறுமதி, கொள்வனவு செய்யப்பட்ட திகதி ஆகிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஈ) இணங்காத மீதிகள்**

(i) இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் நியுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் கம்பெனி ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சபையின் அறிக்கைகளுக்கு அமைய செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 13,758,998, ரூபா 39,230,000 மற்றும் ரூபா 12,005,909 ஆன போதிலும் அந்நிறுவனங்களால் கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்தப்பட்ட தொகை முறையே ரூபா 17,593,053, ரூபா 45,150,000 மற்றும் ரூபா 1,946,541 ஆகும்.

(ii) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திலிருந்து அபிவிருத்தி லொத்தர் சபைக்கு அறவிடப்பட வேண்டிய எந்த தொகையும் நிதி கூற்றுக்களுக்கு இணங்காத போதிலும் இலங்கை ஒளிபரப்பு கூட்டத்தாபனத்தினால் கணக்காய்விற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கமைய அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,921,681 ஆகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 சபையின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் நான் வழங்குவதற்கு எதிர்பார்க்கும் சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டும்.

நிதிக்கூற்றுகள் தொடர்பிலான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன் நான் அது தொடர்பில் எந்த விதமான சான்றுபடுத்தல் அல்லது அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுகள் தொடர்பில் எனது கணக்காய்விற்கு உரியதாக எனது பொறுப்பாவது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய போது அவற்றை வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதி கூற்றுக்கள் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு எந்த விதத்திலாவது பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் அடிப்படையில் பொறுமையாக பொருந்தவில்லையா என்பதை கருத்தில் கொள்வதே ஆகும்.

சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதில் பொறுமையான தவறுகள் காணப்படுவதாக நான் தீர்மானித்தால் திருத்துவதற்கு ஆளுகைக்குட்டப்பட்ட தரப்பினருக்கு அந்த விடயங்களை தெரிவிக்க வேண்டும். தொடர்ந்தும் திருத்தப்படாது தவறுதலாக காண்பிக்கப்பட்டு இருப்பின் அவற்றை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கமைய என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக

# சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுக-ளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நி-கழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

## 02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்வுக்கு அத்தியாவசியமானது என கருதப்படும் அனைத்து தகவல்களும் மற்றும் தெளிவுடுத்தல்களும் எனக்கு கிடைக்கப்பெற்றதுடன், எனது பரிசோதனையின் பிரகாரம் உரிய நிதி அறிக்கைகள் ஆணைக்குழுவினால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐ)(ஈ)(ஜை) ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியின் 1.2(ஆ)(ஐ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு அவதானிப்பு

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சபையினால் ரூபா.1,728,541,094 கூட்டுத் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு எபரிசில்களை வென்றோர் உரித்துக் கோராத 06 மாத காலத்தை கடந்த பரிசில்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையை முதலாவதாக நிதியத்திற்கும் அதன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்த ரூபா.779,750 கூட்டு பெறுமதியுடைய

மூன்று மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்பட்டு அந்த தொகை அதிகாரச் சட்டத்திற்கமைய ஈடுபடுத்த மீளாய்வாண்டின் மே 30 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரசு கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் றறறி.சழஅளைந.டம வலைதளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (ந - பீ) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிராமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2008 டிசம்பர் 31 ஆம் திகதிய 42 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 147 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 250,000 ஆன கடன் எல்லையை விஞ்சி ரூபா 9,867,854 கூட்டுத்தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக சபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், விளைதிறன் கொண்டதாகவும் உரிய காலப்பகுதியில் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

(i) சபையினால் 2020 மே மாதத்தில் 07 லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோ-கிப்பதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விலை கேள்வி ஆவணங்களுக்கு சரியான பெறுகைகள் வழிகாட்டல்களை பின்பற்றாத காரணத்தால் அதற்கும் 06 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2020 டிசம்பர் மாதத்தில் அப்பெறுகை நடவடிக்கைகளை இரத்து செய்ய நேர்ந்திருந்தது. மீண்டும் 2021 பிப்ரவரி மாதத்தில் 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் தேவைப்பாட்டிற்கமைய விலை கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படாத காரணத்தால் அதன் பின்னர் 11 மாதங்களுக்கு பிறகு 2022 ஜனவரி 20 ஆம் திகதி அந்த பெறுகையும் இரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீண்டும் 2022 பெப்ரவரி மாதத்தில் அந்த 08 லொத்தர் சீட்டுகளுக்கு மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் இறுதி வரையிலும் 01 வருடம் 01 மாதம் கடந்திருந்த போதிலும் வழங்குநர்களை தெரிவு செய்து விலை கேள்வியை கையளிப்பதற்கு சபை தவறியிருந்தது. அதற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபைக்கு 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் சரியான பெறுகையொன்றின் மூலம் லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் மற்றும் மீள கையளிப்பதற்கு வழங்குநர்களை தெரிவு செய்ய முடியாதிருந்தது.

(ii) சபையினால் 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2022 ஆம் ஆண்டின் இறுதி அளவில் 03 சந்தர்ப்பங்களில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த வருடத்திற்காக லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு அச்சீட்டாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு விலை கேள்வியை கையளிப்பதற்கு தவறியமை காரணமாக 2020 ஜூலை முதல் 2022 ஜூலை 31 வரையான காலப்பகுதியில் 01 மாதம், 02 மாதங்கள், 03 மாதங்கள், 04 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் எனும் குறுங்காலப் பகுதிகளுக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு 09 சந்தர்ப்பங்களில் முனைய வழங்குநர்கள் இருவருக்கு அரசு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.14 பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2022 பெப்ரவரி மாதத்தில் அமைச்சரவையின் நிலையான பெறுகைகள் குழுவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பிரதான பெறுகை நடைமுறை நிறைவடைந்திராத காரணத்தால் 2022 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான 03 மாத காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 190 மில்லியன் ஆன 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் ஊடாக தேசிய போட்டி அடிப்படையிலான முறைமையின் கீழ் விலைக்கேள்வி கோரல் மூலம் இரு நிறுவனங்களுக்கு 03 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் விலைக்கேள்வி கையளித்தல் இடம்பெற்றிருந்ததுடன் 1½ மாதங்கள், 02 மற்றும் 03 மாதங்கள் ஆகிய குறுகிய காலப்பகுதிகளின் ஊடாக 2023 ஏப்ரல் 15 ஆம் திகதி வரையிலும் 09½ மாத காலப்பகுதிக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு இந்த இரு நிறுவனங்களுக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.

## 2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(i) சபையினால் 2022 செப்டம்பர் 05 ஆம் திகதிய 2022/09/2005 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக லக்ன வாசனாவ லொத்தர் சீட்டின் விற்பனைக்காக விற்பனை முகவருக்கு தற்போது வழங்கப்படும் ரூபா 3.25 ஆன தரகு பணத்திற்கு மேலதிகமாக ரூபா 0.50 ஆன மேலதிக தரகுப்பணம் 2022 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 03 மாத காலப்பகுதிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2022 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் அந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல் 2023 ஜூன் 20 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையின் நிதியத்தில் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்களுக்கு ரூபா 43,092,258 தொகையான மேலதிக தரகு பணம் விற்பனை முகவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்காக மாத்திரம் மேலதிகமாக ரூபா 0.50 செலுத்தப்பட்டிருந்த போதிலும் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்களின் விற்பனையின் அதி-கரிப்பானது 18 சதவீதமான போதிலும் அக்கால பகுதியினுள் மேலதிக தரக் பணம் செலுத்தப்படாத ஏனைய லொத்தர் சீட்டுக்கள் 04 இன் விற்பனை அதி-கரிப்பானது 16 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டமையால் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்கு மாத்திரம் மேல-திகமாக 50 சதம் செலுத்தியமையால் சபை எதிர்பார்த்த லொத்தர் சீட்டு விற்பனையிலான அதிகரிப்பு இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) முன்னாள் தலைவரினால் 2008 ஏப்ரல் 22 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த கப் வண்டி ஒன்றிற்காக அந்த நி-றுவனத்திற்கு கப் வண்டியின் பெறுமதி மற்றும் அந்த தொகைக்கு உரிய சட்டரீதியான வட்டியாக ரூபா 14,923,369 மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா.245,000 எனுமாறு ரூபா 15,168,369 கூட்டுத்தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவடைந்திராததுடன் இது தொடர்பில் சபைக்காக ஆஜராகிய சட்டத்தரணிக்கு ரூபா 1,674,185 ஆன தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த நிகழ்வு தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூபா 16,842,554 ஆகும்.

(iii) லொத்தர் பரிசில்களுக்கு வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 592,500 பெறுமதியான 123 வெகுமதி வவுச்சர்கள் சுமார் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எந்த பணியிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

**டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| **1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**<br><br>**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்**<br><br>(i) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக கடந்த வருடங்களில் நடைமுறைப் பொறுப்புகளாக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 13,793,093 தொகை மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடந்த வருடங்களில் அட்டுறுச் செலவினத்தின் மதிப்பீடுகளில் (Estimate) இடம்பெற்ற வேறுபாடுகளின் திருத்தமாகும். அதனால் டுமுயுளு 8 நியமம் அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளது.<br>இந்த கணக்கீட்டு நியமம் (LKAS 8) இன் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு கடந்த வருடங்களில் இடம்பெற்ற மதிப்பீட்டுடன் தொடர்புடைய திருத்தங்கள் நடப்பாண்டுக்கு உரியதாக கொண்ணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது (Prospective Recognition). |
| (ii) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 36 ஆம் பந்திக்கமைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை மீள்மதிப்பீடு செய்யும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்குரிய வகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அலுவலக உபகரணங்கள, தளபாடங்கள் மற்றும் பொருத்துகள் ஆகிய இரு சொத்து வகுப்புகளுக்குரிய ரூபா 56,204,125 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்களில் ரூபா 11,707,714 தொகையான சொத்துக்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 44,496,411 கூட்டுப் பெறுமதியுடைய சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபை இறுதியாக 2019/20020 ஆம் ஆண்டுகளில் முழுமையாக சொத்து மதிப்பீட்டினை மேற்கொண்டிருந்தது. இந்த மீள்மதிப்பீட்டு பெறுமதிகளை 5 வருடங்களை வரை பேணும் இயலுமை காணப்படுகின்றது. அதற்கமைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளையும் கருத்திற்கொண்டு சபையின் அனைத்து சொத்துக்களுக்காகவும் முறையான மீள்மதிப்பீடொன்று 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது. |
| (iii) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் ஆகியவை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 81,790,967 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய மதிப்பீட்டு வழுவினை இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை இறுதியாக 2019/2020 ஆம் ஆண்டுகளில் முழுமையாக சொத்து மதிப்பீட்டினை மேற்கொண்டிருந்தது. இந்த மீள்மதிப்பீட்டு பெறுமதிகளை 5 வருடங்களை வரை பேணும் இயலுமை காணப்படுகின்றது. அதற்கமைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளையும் கருத்திற்கொண்டு சபையின் அனைத்து சொத்துக்களுக்காகவும் முறையான மீள்மதிப்பீடொன்று 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது. |
| (ஆ) கணக்கிட்டு குறைபாடுகள்<br><br>(i) தற்போது நிர்மாணிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள பணிகளுக்காக திட்டம் ஒன்றினை தயாரிப்பதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 1,728,884 கூட்டுத்தொகையான செலவினங்களுக்கு உரிய கணக்கீட்டு சீராக்கங்களை மேற்கொள்ளாது 08 வருடங்களாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமம் டுமுயுளு 16 இன் பிரகாரம் சொத்தொன்றாக இனங்காணுவதற்காக குறித்த சொத்தானது நலன்களை பெறும் மட்டத்தினை அடைந்திருக்க வேண்டும். (It is Probable that Future economic benefits associated with the item will flow to the entity.) அதனால், 2022.12.31 ஆந் திகதி வரையிலும் மேற்படி நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனை அடிப்படையாக கொண்டு குறித்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (ii) சபையின் 2022 ஆம் ஆண்டின் வருமான வரி செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது முதல் அரையாண்டின் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 24 சதவீதம் மற்றும் இரண்டாவது அரையாண்டில் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீதம் உரித்தாக்கிக் கொள்ளப்படவேண்டிய போதிலும் சபையினால் முழு வருடத்தினதும் வரி அறவிடப்பட வேண்டிய இலாபத்தின் அடிப்படையில் 30 சதவீத வரி விதம் உரித்தாக்கபட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமான வரி செலவினம் ரூபா 6,127,600 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் வரிக்குப் பின்னரான இலாபம் அந்த அளவினால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதியாண்டு சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கின்ற காரணத்தால் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 20(3)(a)(ii)(C) மற்றும் (D) பிரிவுகள் மற்றும் 38(1) பிரிவின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது வருமான வரிச் செலுத்தும் போது முதல் 09 மாதங்களுக்காக 24மூ வரி வீதமொன்று மற்றும் இறுதி 03 மாதங்களுக்காக 30மூ வரி வீதமொன்று கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டின் வரி கொடுப்பனவுகளுக்காக இந்த கணிப்பீடு பயன்படுத்தப்படவுள்ளது. சபையின் கணக்காண்டு சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையானதாக காணப்படுகின்றமையால் தாங்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு 06 மாதங்களுக்காக 24மூ மற்றும் எஞ்சிய 06 மாதங்களுக்காக 30% சதவீதமும் பொருந்தாது.<br><br>வருடாந்த வருமான வரியை கணிப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக கணிப்பிட முடியாமையால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் (LKAS) 12 இன் பிரகாரம் அதற்காக மதிப்பீடொன்றின் அடிப்படையில் மாத்திரம் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்படும். வருடாந்த வருமான வரியியை திட்டவட்டமாக கணிப்பிட்டு கொடுப்பனவு மேற்கொள்வதற்காக அதற்கடுத்த நிதியாண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2022 ஆம் ஆண்டின் வருமான வரிக் கணக்கீடு செய்யப்பட வேண்டிய விதம் தொடர்பில் சுற்றறிக்கையொன்று (ளுநுஊ/2023/ந/03) 2023.05.09 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய எம்மால் 2023 செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னதாக உரிய முறையில் முதல் 09 மாதங்கள் மற்றும் இறுதி 03 மாதங்களுக்காக வருமானம் மற்றும் செலவினங்களை கருத்திற்கொண்டு தனித்தனியாக கணிப்பிடப்பட்டதன் பின்னர் உரிய வரி வீதங்களுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். |
| (i) நடைமுறையல்லாத சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,095,000 பெறுமதியான கப் வண்டி ஒன்று முன்னால் தலைவரினால் எடுத்து செல்லப்பட்டமையால் பௌதிகரீதியாக சபையிடம் காணப்படவில்லை. | இந்த கார் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பதிவின் அடிப்படையில், தொடர்புடைய சொத்து 2012 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த வண்டியின் இடம் மாறியமை தொடர்பில், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் வழக்கு இலக்கம் 00DMR/04781/2021 இன் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (iv) 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் லொத்தர் விற்பனை வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 840,343 கூட்டுத்தொகையான லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செய்யப்படாது மீள் செலுத்தல்களாக கருதி மீளாய்வாண்டிலும் குறித்த பகிர்ந்தளிப்பு பிரதிநிதிகளுக்கு பணம் செலுத்தப்பட்டு மீள் அனுப்பல்களாக ரூபா 616,743 மற்றும் வாகன பராமரிப்பு செலவினமாக ரூபா 223,600 எனுமாறு கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 840,343 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இந்த டிக்கெட் இருப்புகளுக்கு உரிய கொடுப்பனவு 2022 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. இங்கு, 4 விநியோக முகவர்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இந்த நான்கு கட்டணங்களுக்கும் சிறப்பு பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2022/08/1997 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அறிக்கையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, 2022 ஆம் ஆண்டில் அதற்கான கட்டணம் செலுத்தப்பட்டது.<br><br>அந்த தொகையினுள் ரூபா 223,600 தொகையான வாகனப் பராமரிப்புச் செலவாகத் தவறாகக் கணக்கிடப்பட்டதுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்குமாறு ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

# கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (இ) கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை<br><br>நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு உரிய கணினி மயப்படுத்தப்பட்ட மூலப்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட முறையே ரூபா 4,107,599 மற்றும் ரூபா 2,523,988 தொகையான கணினி மற்றும் அலுவலக உபகரண உருப்படிகளின் அளவானது கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டு பெறுமதி, கொள்வனவு செய்யப்பட்ட திகதி ஆகிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்களில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய குழுவை இப்போது நியமித்துள்ளது, மேலும் கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கணக்கு இருப்பைக் கண்டறிய இந்த குழு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால், கணினிகள் மற்றும் உதிர்ப்பாகங்களின் இருப்பு ரூபா 4,107,599 தொகையை அகற்ற குழு பரிந்துரைத்ததுடன், அந்த ஐயவினா கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு கணக்குகளில் இருந்து நீக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,523,988 பெறுமதியான அலுவலக உபகரணங்களைப் பொறுத்தமட்டில் குழுவால் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. |
| (ஈ) இணங்காத மீதிகள்<br><br>(i) இலங்கை ஒளிபரப்பு கூட்டத்தாபனம், இலங்கை ரூபவாஹினி கூட்டத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட அசோசியேட்டட் நிவுஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் கம்பெனி ஆகிய மூன்று நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சபையின் அறிக்கைகளுக்கு அமைய செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 13,758,998, ரூபா 39,230,000 மற்றும் ரூபா 12,005,909 ஆன போதிலும் அந்நிறுவனங்களால் கணக்காய்விற்கு நேரடியாக உறுதிப்படுத்தப்பட்ட தொகை முறையே ரூபா 17,593,053, ரூபா 45,150,000 மற்றும் ரூபா 1,946,541 ஆகும். | சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட இருப்புத் தொகை விவரங்களைப் பெற்ற பிறகு, எங்கள் தகவல்களுக்கும் தொடர்புடைய ஊடக அமைப்பு வழங்கிய தகவல்களுக்கும் இடையில் சரியான ஒப்பீடு செய்து, இந்த மாற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுவோம். |
| (ii) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திலிருந்து அபிவிருத்தி லொத்தர் சபைக்கு அறவிடப்பட வேண்டிய எந்த தொகையும் நிதி கூற்றுக்களுக்கு இணங்காத போதிலும் இலங்கை ஒளிபரப்பு கூட்டத்தாபனத்தினால் கணக்காய்விற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்களுக்கமைய அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,921,681 ஆகும். | சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தால் வழங்கப்பட்ட இருப்புத் தொகை விவரங்களைப் பெற்ற பிறகு, எங்கள் தகவல்களுக்கும் தொடர்புடைய ஊடக அமைப்பு வழங்கிய தகவல்களுக்கும் இடையில் சரியான ஒப்பீடு செய்து, இந்த மாற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுவோம். |
| 02. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை<br><br>2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை. | சபையின் நிதிய முகாமைத்துவத்தின் ஊடாக குறிப்பிடத்தக்க வட்டி வருமானத்தை ஈட்டுகிறது மற்றும் வருமானம் ஜனாதிபதி நிதிக்கு அனுப்பி வைக்கின்றது. 2022 நிதியாண்டில் ரூபா 273 மில்லியன் ரூபா வட்டி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| சட் டங்கள், விதிகளுக்கான / கட்டளைகளுக்கான தொடர்பு அவதானிப்புகள்<br><br>(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக சபையினால் ரூபா.1,728,541,094 கூட்டுத் தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (ஆ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச் சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு பரிசில்களை வென்றோர் உரித்துக் கோராத 06 மாத காலத்தை கடந்த பரிசில்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தமையால் கிடைக்கும் தொகையை முதலாவதாக நிதியத்திற்கும் அதன் பின்னர் சனாதிபதி நிதியத்திற்கும் செலவு வைக்க வேண்டிய போதிலும் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்த ரூபா.779,750 கூட்டு பெறுமதியுடைய மூன்று மோட்டார் துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்யப்பட்டு அந்த தொகை அதிகாரச் சட்டத்திற்கமைய ஈடுபடுத்த மீளாய்வாண்டின் மே 30 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த 03 மோட்டார் சைக்கிள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, கைத்தவிர்ப்பு நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதி நிதியத்திற்கு பணத்தை அனுப்ப திட்டமிடப்பட்டது. ஆனால் இந்த 03 மோட்டார் சைக்கிள்களை ஜனாதிபதி செயலகத்தின் பாவனைக்காக வழங்குமாறு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து இயந்திர பொறியியலாளர் ஒருவர் வந்து இந்த 03 மோட்டார் சைக்கிள்களை பரிசோதிப்பார் மற்றும் ஜனாதிபதி அலுவலகத்திற்கு கொள்வனவு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, மேலும் இந்த 03 மோட்டார் சைக்கிள்கள் ஜனாதிபதி அலுவலகத்தால் ஜூன் மாதத்தில் கொள்வனவு செய்யப்படும். இந்த 03 மோட்டார் சைக்கிள்களை சனாதிபதி நிதியத்திற்கு வழங்குவதற்கு தேவையான பற்றுச்சீட்டு 2023.05.22 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது. |
| (இ) 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை 2020 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னதாக அரசு கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்களாக அரச நிறுவனங்கள் றறறிசழஅளைந.டம வலைதளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிராமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.<br><br>அரச பெறுகைகள் நடைமுறையின் (ந - பீ) இன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்டிராமையால் அதற்கமைய பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | தற்போது இந்த நிறுவனம் இலத்திரனியல் அரச பெறுகைகள் நடைமுறையின் (e - GP) இன் கீழ் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளது. இந்த பதிவினை மேற்கொண்ட பின்னர் இந்த நிறுவனத்திற்கு அந்த பெறுகை நடைமுறையை பின்பற்றும் இயலுமை காணப்படுகின்றது. |
| 2008 டிசம்பர் 31 ஆம் திகதிய 42 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 147 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 250,000 ஆன கடன் எல்லையை விஞ்சி ரூபா 9,867,854 கூட்டுத்தொகை இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட் பின்னர் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 250,000 இனை விஞ்சாத வகையில் இடர் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022 ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் எந்தவொரு பதவியணி அங்கத்தவருக்கும் குறித்த எல்லையினை விஞ்சி இடர் கடன் தொகை வழங்கப்படுவதில்லை. |

# கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| 2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக சபையின் வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும், விளைதிறன் கொண்டதாகவும் உரிய காலப்பகுதியில் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.<br><br>(i) சபையினால் 2020 மே மாதத்தில் 07 லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விலை கேள்வி ஆவணங்களுக்கு சரியான பெறுகைகள் வழிகாட்டல்களை பின்பற்றாத காரணத்தால் அதற்கும் 06 மாதங்களுக்கு பின்னர் அதாவது 2020 டிசம்பர் மாதத்தில் அப்பெறுகை நடவடிக்கைகளை இரத்து செய்ய நேர்ந்திருந்தது. மீண்டும் 2021 பிப்ரவரி மாதத்தில் 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் தொடர்பில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் தேவைப்பாட்டிற்கமைய விலை கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படாத காரணத்தால் அதன் பின்னர் 11 மாதங்களுக்கு பிறகு 2022 ஜனவரி 20 ஆம் திகதி அந்த பெறுகையும் இரத்து செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீண்டும் 2022 பெப்ரவரி மாதத்தில் அந்த 08 லொத்தர் சீட்டுகளுக்கு மீண்டும் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் இறுதி வரையிலும் 01 வருடம் 01 மாதம் கடந்திருந்த போதிலும் வழங்குநர்களை தெரிவு செய்து விலை கேள்வியை கையளிப்பதற்கு சபை தவறியிருந்தது. அதற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபைக்கு 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் சரியான பெறுகையொன்றின் மூலம் லொத்தர் சீட்டுகளை அச்சிட்டு விநியோகித்தல் மற்றும் மீள கையளிப்பதற்கு வழங்குநர்களை தெரிவு செய்ய முடியாதிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பெறுகைக்கு உரியதாக திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் ஒரு லொத்தர் சீட்டு வகைக்காக வழக்குநர் ஒருவரை தெரிவு செய்தல் ஒரு பெறுகையாக கருதி தனித்தனியாக விலைக்கேள்வி ஆவணங்களை வழங்குவதன் மூலம் விலைக்கேள்வி கோரப்பட்டுள்ளது. (இதற்கு முன்னரும் பல வருடங்களாக அமைச்சின் பெறுகைகள் குழுவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி கோரல்களின் போதும் அவ்வாறே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.)<br><br>அந்த பெறுகைக்கு உரிய விலைக்கேள்வி ஒப்படைக்கும் இறுதிக் கட்டத்தில் ஒரு லொாத்தர் சீட்டினை விநியோகித்தல் ஒரு பெறுகைளாக கருதி விலைக்கேள்வி கோரப்பட்டமை பிரச்சினைக்குரியதாக காணப்பட்டமையால் அந்த விலைக்கேள்வி கோரல் இரத்துச் செய்யப்பட்டது.<br><br>இந்த ஆரம்ப பெறுகைக்கு உரியதாக ஆரம்ப விலைக்கேள்வி ஆவணங்களை அங்கீகரிதடதலும் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இந்த இரத்துச் செய்தல்களும் இந்த குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (பெறுகையின் ஆரம்பத்தில் செயற்பட்ட குழு அங்கத்துவம் விலைக்கேள்வி கையளிக்கப்டப்ட இறுதிக் கட்டத்தில் மாற்றமடைந்திருந்தது)<br><br>பின்னர் இதற்காக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழு (SCAPC) மூலம் திறந்த விலைக்கேள்வி கோரப்பட்டதுடன், அந்த பெறுகைக்குரியதாக ஒரு வெற்றிகரமான கூறுவிலை மாத்திரம் கிடைத்திருந்தமையால் அவ்வாறு கிடைத்திருந்த கூறுவிலையின் அடிப்படையில் ஒருவ வழங்குநருக்கு சபையின் அனைத்து லொத்தர் சீட்டுகளையும் விநியோகிப்பதற்கு கையளிப்பதற்குள்ள வாய்ப்புக்கான அச்சுறுத்தல் நிலைமை மற்றும் உயர் கூறுவிலைகள் நிலவுகின்றமை போன்ற பல்வேறு விடயங்களை கருத்திற்கொண்டு அந்த விலைக்கேள்வியாளருக்கு விலைக்கேள்வி கையளிக்கப்பட்டதுடன், இதற்காக மீண்டும் கூறுவிலை கோருவதற்கு ளுஊயுீஊ தீர்மானித்திருந்தது.<br><br>அந்த தீர்மானத்தின் அடிப்படையில் 2022 ஆகஸ்ட் மாதம் மீண்டும் இதற்காக விலைக்கேள்வி கோரப்பட்டதுடன், அததற்கரிய 2023.05.16 ஆந் திகதி முதல் 2024.05.15 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய இரு வழங்குநர்களுக்கு விலைக்கேள்வி கையளித்தல் இடம்பெற்றுள்ளது.<br><br>மேற்படி 03 சந்தர்ப்பங்களுக்கு உரியதான தீர்மானங்கள் அந்த பெறுகைகள் குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (ii) சபையினால் 2020 ஜூலை 31 ஆம் திகதி முதல் 2022 ஆம் ஆண்டின் இறுதி அளவில் 03 சந்தர்ப்பங்களில் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய குறித்த வருடத்திற்காக லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு அச்சீட்டாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு விலை கேள்வியை கையளிப்பதற்கு தவறியமை காரணமாக 2020 ஜூலை முதல் 2022 ஜூலை 31 வரையான காலப்பகுதியில் 01 மாதம், 02 மாதங்கள், 03 மாதங்கள், 04 மாதங்கள் மற்றும் 06 மாதங்கள் எனும் குறுங்காலப் பகுதிகளுக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு 09 சந்தர்ப்பங்களில் முனைய வழங்குநர்கள் இருவருக்கு அரசு பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.14 பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | சபையினால் இறுதியாக இடம்பெற்ற அச்சீட்டு உடன்படிக்கையில் 2019.08.01 ஆந் திகதி முதல் 2020.07.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக காணப்பட்டதுடன், 2020.03.02 ஆந் திகதி எதிர்வரும் வருடத்திற்கு உரியதாக புதிய விலைக்கேள்வியாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், 2020.03.19 ஆந் திகதி முதல் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் நாடு மூடப்பட்டிருந்த காரணத்தால் 02 மாத காலத்திற்கு அந்த பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், 2020.05.18 ஆந் திகதி முதல் அந்த நடைமுறை மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br><br>மேற்குறிப்பிடப்பட்டவாறு நாடு மூடப்பட்டிருந்த காலத்தினை போன்றே, ஆரம்பத்தில் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விலைக்கேள்வி கோரல் இரத்துச் செய்யப்பட்டமை ஆகிய விடயங்கள் பெறுகைகள் நிறுவனத்திற்கு கட்டுப்படுத்த முடியாத தன்னிச்சையான நிகழ்வுகள் ஆகும். எனினும், சபையின் நாளாந்த லொத்தர் செயற்பாட்டு பணிகளுக்காக லொத்தர் சீட்டுகளை விநியோகித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது விற்பனை வலையமைப்பின் வருமானம் இழக்கப்படுகின்றமையின் ஊடாக பாரிய சமூக சிக்கல்கள் உருவாவதற்கு, சபைக்கு பாரிய விற்பனை வருமானம் இழக்கப்படுகின்றமை ஆகியன முக்கியமான விடயங்கள் ஆகும். இந்த நிலைமையினுள் தற்போது காணப்படும் அச்சீட்டு உடன்டிக்கையை நீடித்தல் இதற்கான மாற்றுவழி என்பதால், உடன்படிக்கையின் இரு தரப்பினரதுட் இணக்கப்பாட்டுடன் அந்ததந்த சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த உடன்படிக்கை காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. |

# கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (iii) 2022 பெப்ரவரி மாதத்தில் அமைச்சரவையின் நிலையான பெறுகைகள் குழுவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த லொத்தர் சீட்டுகளை அச்சிடும் பிரதான பெறுகை நடைமுறை நிறைவடைந்திராத காரணத்தால் 2022 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான 03 மாத காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 190 மில்லியன் ஆன 08 வகையான லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் ஊடாக தேசிய போட்டி அடிப்படையிலான முறைமையின் கீழ் விலைக்கேள்வி கோரல் மூலம் இரு நிறுவனங்களுக்கு 03 மாத காலப்பகுதிக்கு மாத்திரம் விலைக்கேள்வி கையளித்தல் இடம்பெற்றிருந்ததுடன் 1½ மாதங்கள், 02 மற்றும் 03 மாதங்கள் ஆகிய குறுகிய காலப்பகுதிகளின் ஊடாக 2023 ஏப்ரல் 15 ஆம் திகதி வரையிலும் 09½ மாத காலப்பகுதிக்கு லொத்தர் சீட்டுகளை அச்சிடுவதற்கு இந்த இரு நிறுவனங்களுக்கு காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழு (SCAPC) மூலம் மீள விலைக்கேள்வி கோரல்களும் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவ்வாறான அச்சீட்டு உடன்படிக்கைகள் நீடிப்பு செய்யப்பட்டிருந்தமை மற்றும் அப்போது நாட்டில் நிலவிய கடுதாசியின் விலை அதிகரித்தமை மற்றும் அந்நிய செலாவணி வீதங்களின் அதிகரிப்பு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு ரேட்கள் (சயவந) விலைகளும் திருத்தப்பட்ட காரணத்தால் இதற்கான பிரதான வருடாந்த பெறுகைக்கு உரியதாக விலைக்கேள்வியாளர் தெரிவு செய்யப்படும் வரையிலும் 03 மாதங்களுக்காக விலைக்கேள்வி கோரப்பட்டு குறுங்காலத்திற்கு விநியோகத்தர் ஒருவரை தெரிவு செய்வதற்ற பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதற்கமைய அந்த விலைக்கேள்வி கோரல் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறான போதிலும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைகள் குழு (SCAPC) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுகைக்குரியதாக வழங்குநர் ஒருவரை தெரிவு செய்யும் வரையிலும், சபையின் நாளாந்த லொத்தர் செயற்பாடுகளுக்காக லொத்தர் சீட்டுகளை விநியோகித்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அவ்வாறு அல்லாத போது விற்பனை வலையமைப்பின் வருமானம் இழக்கப்படுகின்றமையின் ஊடாக பாரிய சமூக சிக்கல்கள் உருவாவதற்கு, சபைக்கு பாரிய விற்பனை வருமானம் இழக்கப்படுகின்றமை ஆகியன முக்கியமான விடயங்கள் ஆகும். இந்த நிலைமையினுள் தற்போது காணப்படும் அச்சீட்டு உடன்டிக்கையை நீடித்தல் இதற்கான மாற்றுவழி என்பதால், உடன்படிக்கையின் இரு தரப்பினரதுட் இணக்கப்பாட்டுடன் அந்ததந்த சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த உடன்படிக்கை காலம் நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. |

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| 2.3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்<br><br>(i) சபையினால் 2022 செப்டம்பர் 05 ஆம் திகதிய 2022/09/2005 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் ஊடாக லக்ன வாசனாவ லொத்தர் சீட்டின் விற்பனைக்காக விற்பனை முகவருக்கு தற்போது வழங்கப்படும் ரூபா 3.25 ஆன தரகு பணத்திற்கு மேலதிகமாக ரூபா 0.50 ஆன மேலதிக தரகுப்பணம் 2022 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 03 மாத காலப்பகுதிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2022 டிசம்பர் 19 ஆம் திகதி முதல் அந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல் 2023 ஜுன் 20 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையின் நிதியத்தில் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்களுக்கு ரூபா 43,092,258 தொகையான மேலதிக தரகு பணம் விற்பனை முகவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்காக மாத்திரம் மேலதிகமாக ரூபா 0.50 செலுத்தப்பட்டிருந்த போதிலும் செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் லக்ன வாசனாவ லொத்தர் சீட்டுக்களின் விற்பனையின் அதிகரிப்பானது 18 சதவீதமான போதிலும் அக்கால பகுதியினுள் மேலதிக தரகு் பணம் செலுத்தப்படாத ஏனைய லொத்தர் சீட்டுக்கள் 04 இன் விற்பனை அதிகரிப்பானது 16 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டமையால் லக்ன வாசனா லொத்தர் சீட்டுக்கு மாத்திரம் மேலதிகமாக 50 சதம் செலுத்தியமையால் சபை எதிர்பார்த்த லொத்தர் சீட்டு விற்பனையிலான அதிகரிப்பு இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த காலப்பகுதியினுள் லக்ன வாசனா லொத்தர் சீட்டின் விற்பனையிலான அதிகரிப்பு வேகத்தில் ஒப்பீட்டு ரீதியிலான குறைவுக்கு காரணம் இந்த லொத்தர் சீட்டுக்கு நிலவிய சந்தைப் போட்டித்தன்மை ஆகும். அதாவது, அந்த லொத்தர் சீட்டின் போட்டி சுற்றிலில் நேரடியாக போட்டியிடுவதற்கு ஹந்தஹுன எனும் பெயருடைய லொத்தர் சீட்டிற்கு அதிக விற்பனை முகவர் நலன்கள் (விற்பனை முகவர்களுக்கு பொதுவான தரகுப் பணத்திற்கு மேலதிகமாக 50 சதமான மேலதிக ஊக்குவிப்புப் படியொன்று வழங்குதல்) மற்றும் பரிசில் சதவீதத்தினை அதிகரித்து (02 லக்னங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பரிசில்களை வழங்குதல்) போட்டித் தன்மை வாய்ந்த நிறுவனங்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தியமை ஆகியவற்றால் லக்ன வாசனா லொத்தர் சீட்டின் விற்பனைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியது. லக்ன வாசனா லொத்தர் சீட்டின் சுமார் 10 இலட்சமாக காணப்பட்ட நாளாந்த விற்பனை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு இந்த 50 சதம் வழங்கப்பட்டது. |
| (ii) முன்னாள் தலைவரினால் 2008 ஏப்ரல் 22 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த கப் வண்டி ஒன்றிற்காக அந்த நிறுவனத்திற்கு கப் வண்டியின் பெறுமதி மற்றும் அந்த தொகைக்கு உரிய சட்டரீதியான வட்டியாக ரூபா 14,923,369 மற்றும் வழக்கறிஞர் கட்டணமாக ரூபா.245,000 எனுமாறு ரூபா 15,168,369 கூட்டுத்தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையினால் தொடுக்கப்பட்ட வழக்கு 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவடைந்திராததுடன் இது தொடர்பில் சபைக்காக ஆஜராகிய சட்டத்தரணிக்கு ரூபா 1,674,185 ஆன தொகையும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த நிகழ்வு தொடர்பில் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவினம் ரூபா 16,842,554 ஆகும். | சபைக்கு கொள்வனவு செய்யப்பட்ட WP-PB 6024 ஆம் இலக்கமுடைய கெப் வண்டியொன்று முன்னாள் தலைவர் ஒருவர் எடுத்துச் சென்றிருந்த காரணத்தால், வாகனத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்னு சபை பணம் செலுத்தாத காரணத்தால் அந்த தனியார் நிறுவனங்களால் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்த காரணத்தால் சபையினால் அந்த நிறுவனத்திற்க ரூபா 15,168,367 ஆன தொகை செலுத்த நேர்ந்தது. அதன் காரணமாக கெப் வண்டியின் பெறுமதி, சட்ட வட்டி, குறித்த நிறுவனங்கள் மேற்கொண்ட சட்டத்தரணி கட்டணம் மற்றும் சபையீன் சட்டத்தரணிக்கான கட்டணமாக ரூபா 1,674,185 ஆன நட்டமொன்று சபைக்கு நேர்ந்திருந்தது. இந்த பணத்தை அறவிடுவதற்காக உரிய சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதுடன், இந்த வழக்கிற்கரிய முதலாவது நீதிமன்ற திகதி 2022.05.06 ஆந் திகதி இடம்பெற்றதுடன், இரண்டாவது நீதிமன்ற திகதியாக 2023.04.07 ஆந் திகதி இடம்பெற்றது. |

# கணக்காய்வு அறிக்கை - 2022 மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| (i) லொத்தர் பரிசில்களுக்கு வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 592,500 பெறுமதியான 123 வெகுமதி வவுச்சர்கள் சுமார் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எந்த பணியிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | ச. தொ.ச நிறுவனத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 5,92,500 பெறுமதியான உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி தொடர்பில் வர்த்தக அமைச்சின் செயலாளரின் 2021/04/05 மற்றும் 2021/08/21 தேதியிட்ட கடிதங்கள் மூலம் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு உரிய தொகையை செலுத்துமாறு லங்கா சதொச நிறுவனத்திற்கு அறிவித்துள்ளார், ஆனால் எந்த பதிலும் வழங்கப்படவில்லை.<br><br>இந்நிலையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய வவுச்சர் பெறுமதியை செலுத்தாமை தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 20022/09/09 அன்று லங்கா சதொச நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், 10 நாட்களுக்குள் உரிய பெறுமதியை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் லங்கா சதொச நிறுவனத்தினால் எடுக்கப்படவில்லை.<br><br>வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரால் மேற்படி வவுச்சர்களை 6 மாதங்கள் வரை மீண்டும் செயற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்துள்ளார் அல்லது அதே பெறுமதியான பொருட்களை ச.தொ.ச நிறுவனத்திலிருந்து வழங்குமாறு பணித்துள்ளார்.<br><br>இந்த வவுச்சர்களை 6 மாதங்கள் வரை மீண்டும் செயற்படுத்துவதற்கு லங்கா ச.தொ.ச ஒப்புக்கொண்டது, ஆனால் 2023/02/01 அன்று உரிய வவுச்சர்கள் லங்கா சதொசவிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும், லங்கா சதொச பல்வேறு காரணங்களைத் தெரிவித்து வவுச்சர்களை மீண்டும் செயல்படுத்த முடியாது என்று தெரிவித்துள்ளது.<br><br>இந்நிலையில், உரிய பிரச்னை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு அனுப்பப்பட்டதுடன், இப்பிரச்னையை பணிப்பாளர் சபைக்கு அனுப்ப குறித்த குழு முடிவு செய்தது. அதன்படி, அந்த உறுதிச்சீட்டுக்களின் பெறுமதி தொடர்பில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்து இரு தரப்பினரிடையே கலந்துரையாடல் மூலம் தீர்வொன்றினை பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் சபையினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>இவ்விடயத்தில் தலையிட்டு இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023/03/28 ஆந் திகதிய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

# விரிவான வருமானக் கூற்றின் கணக்கு விபரம்

| டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2022 | 2021 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வருவாய் | 01 | 19,071,456,751 | 15,364,398,498 |
| லொத்தர் சீட்டுகளுக்கான கிரயம் | 02 | 844,240,759 | 433,523,004 |
| பரிசுகளுக்கான செலவினம் | 03 | 9,884,078,986 | 7,865,640,218 |
| சீட்டிழுப்பு கிரயம் | 04 | 751,141,022 | 542,022,297 |
| மொத்த இலாபம் | | 7,591,995,984 | 6,523,212,978 |
| ஏனைய வருமானம் | 05 | 320,846,644 | 110,304,701 |
| விநியோக கிரயம் | 06 | 4,487,324,271 | 3,484,491,585 |
| நிர்வாக செலவுகள் | 07 | 605,097,921 | 536,791,467 |
| தொழிற்படுத்தல் செலவுகளுக்கு பினனரான மிகை | | 2,820,420,437 | 2,612,234,628 |
| நிதிக் கிரயம் | 08 | 979,196 | 936,549 |
| பரிசுகளை செலுத்தித் தீர்த்தல் | | 447,150,260 | 342,230,480 |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 3,266,591,501 | 2,953,528,558 |
| வருமான வரி | 09 | 55,904,459 | 83,440,185 |
| வருமான வரிக்கு பின்னரான இலாபம் | 10 | 3,210,687,041 | 2,870,088,373 |
| பிற விரிவான வருமானம் | | | |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/ நட்டம் | 17.1 | 9,112,463 | 5,863,008 |
| மீள்மதிப்பீட்டு மிகை | | 5,853,857 | |
| ஆண்டுகான மொத்த விரிவான வருமானம் | | 3,225,653,361 | 2,875,951,381 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

ரு.யு.ஏ.ஊ. சோமரத்ன
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

அஜித் குணரத்ன நாரகல
தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

ஜெனட் ஜயவர்தன
பணிப்பாளர்

# நிதி நிலைக்கூற்று

| ரூபா டிசெம்பர் 31 இல் உள்ளவாறு குறிப்பு | குறிப்பு | 2022 | 2021 |
|---|---|---|---|
| | | &.. | ரூ... |
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | |
| ஆதனங்கள், இயந்திரசாதனங்கள்,உபகரணங்கள் | 11 | 1,082,575,630 | 1,138,357,289 |
| நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் | 11 | 3,228,884 | 2,778,884 |
| அருவச் சொத்துக்கள் | 11 | 9,488,402 | 17,539,784 |
| மொத்த நடைமுறையல்லாச சொத்துக்கள் | | 1,095,292,917 | 1,158,675,958 |
| நடைமுறை சொத்துக்கள் | | | |
| பதிவேடுகள் | 13 | 45,970,611 | 43,102,269 |
| வணிக கடன்பெற்றோர் மற்றும் பிற வருமதிகள் | 14 | 163,480,972 | 150,441,764 |
| முற்கொடுப்பனவு மற்றும் வைப்புகள் | 15 | 6,223,428 | 11,141,943 |
| நிலையான வைப்புகள் | 12 | 1,742,324,887 | 1,142,259,436 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | 557,240,367 | 900,006,350 |
| மொத்த நடைமுறை சொத்துக்கள் | | 2,515,240,265 | 2,246,951,762 |
| மொத்த சொத்துக்கள் | | 3,610,533,182 | 3,405,627,719 |
| | | | |
| உரிமைபபங்குகள் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்களிப்பு மூலதனம | | | |
| சனாதிபதி நிதியம் | | 2,200,000 | 2,200,000 |
| மகாபொல நம்பிக்கை நிதியம் | | 2,200,000 | 2,200,000 |
| கணக்கிலுள்ள பரிசுக்கான ஒதுக்கம் | | 725,956,289 | 448,131,648 |
| செலுத்தப்படவேண்டிய சனாதிபதி நிதியம் | | 315,791,041 | 564,219,473 |
| மீள்மதிப்பீடு மிகை | | 620,583,095 | 614,729,237 |
| ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம்/ நட்டம் | | 11,836,354 | 2,723,891 |
| மொத்த உரிமைப் பங்கு | | 1,678,566,779 | 1,634,204,250 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | | | |
| ஊழியர் நலன்சார் பொறுப்புகள் | 17 | (4,438,730) | (9,372) |
| செலுத்தப்பட வேண்டிய முகவர் மற்றும் விநியோகத்தர் வைப்புகள் | 8 | 38,718,881 | 37,664,881 |
| மொத்த நடைமுறையல்லா பொறுபபுகள் | | 34,280,151 | 37,655,509 |
| நடைமுறை பொறுப்புகள் | | | |
| வணிக மற்றும் ஏனைய சென்மதிகள் | 19 | 771,026,177 | 640,706,596 |
| சென்மதியான பரிசுகள் | 20 | 1,003,306,515 | 962,793,104 |
| சென்மதியான கடன் வவுச்சார்கள் | | 123,353,560 | 130,268,260 |
| மொதத நடைமுறை பொறுப்புகள் | | 1,897,686,252 | 1,733,767,960 |
| மொத்த உரிமைப் பங்கு மற்றும் பொறுப்புகள் | | 3,610,533,182 | 3,405,627,719 |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் பணிப்பாளர்கள் முழு பொறுப்புடையவர்களாவர். இந்த நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையெழுத்திடப்பட்டன.

**ரு.யு.ஏ.ஊ. சோமரத்ன**
பிரதி பொது முகாமையாளர் (நிதி)

**அஜித் குணரத்ன நாரகல**
தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

**ஜெனட் ஜயவர்தன**
பணிப்பாளர்

# காசுப் பாய்வுக் கூற்று

| டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2022 | 2021 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூ. | ரூ. |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து விளைந்த காசுப் பாய்வு | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 3,266,591,501 | 2,953,528,558 |
| | | | |
| சீராக்கங்கள் | | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | | 76,864,509 | 85,621,228 |
| பரிசு ஒதுக்கக் கணக்கு | | 277,824,641 | (250,426,959) |
| பணிகொடைக்கான ஒதுக்கம் | | 9,482,677 | 8,787,447 |
| பணிகொடைக்கான கொடுப்பனவு | | (1,330,145) | (2,440,010) |
| வட்டி வருமானம் | | (276,451,109) | (101,048,159) |
| நிலையான சொத்துக்கள் விற்பனை மூலம் இலாபம் | | (485,143) | (2,000) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | | (653,294) |
| சனாதிபதி நிதியத்திற்கு செலுத்தியது | | (3,459,115,473) | (2,991,728,983) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படுத்தல் இலாபம் | | (106,618,541) | (298,362,171) |
| | | | |
| தொழிற்பாடடு சொத்துக்களின் அதிகரிப்பு /குறைவு | | | |
| பதிவேடுகளில் அதிகரிப்பு/குறைவு | | (2,868,343) | (10,511,637) |
| கடன்பெறுனர்களின் அதிகரிப்பு/குறைவு | | (8,696,537) | (57,379,665) |
| வைப்பு மற்றும் முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/குறைவு | | 4,918,515 | (2,944,565) |
| | | | |
| தொழிற்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு/குறைவு | | | |
| கடன் தருநர்களின் அதிகரிப்பு/குறைவு | | 74,565,122 | 65,157,266 |
| சென்மதியான பரிசுகளின் அதிகரிப்பு/குறைவு | | 40,513,411 | 384,174,247 |
| கடன் வவுச்சர்களின் அதிகரிப்பு/குறைவு | | (6,914,700) | 14,982,220 |
| | | | |
| தொழிற்பாட்டு செற்பாடுகளின் நிகர காசுப் பாய்வு | | (5,101,074) | 95,115,695 |
| | | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு | | | |
| பணியாளர்களுக்கான கடன் - பெற்றவை | | 22,222,066 | 26,027,222 |
| பணியாளர்களுக்கான கடன் - செலுத்தப்பட்டவை | | (26,564,736) | (26,548,102) |
| நிலையான சொததுக்களின் அகற்றல் (ஆதனங்கள், இயந்திரசாதனங்ள் மற்றும் உபகரணங்கள்) | | (7,942,228) | (30,917,973) |
| விற்பனை செய்யப்பட்ட நிரந்தர சொத்துக்கள் | | 649,759 | 2,000 |
| வட்டி வருமானம் | | 276,451,109 | 101,048,159 |
| நிலையான வைப்புகளில் முதலீடுகள் | | (603,534,878) | 192,342,087 |
| முகவர் விநியோக வைப்புகளின் அதிகரிப்பு | | 1,054,000 | 1,274,500 |
| முதலீட்டு செயற்பாடுகளினால் விளைந்த தேறிய காசு | | (337,664,908) | 263,227,892 |
| | | (342,765,983) | 358,343,587 |
| | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய காசு அதிகரிப்பு/குறைவு | | (342,765,983) | 358,343,587 |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | | 900,006,350 | 541,662,763 |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 16 | 557,240,367 | 900,006,350 |
| | | | |
| வங்கிலுள்ள காசு - இலங்கை வங்கி | | 264,588,741 | 347,366,305 |
| - மக்கள் வங்கி | | 288,958,323 | 544,886,006 |
| - சம்பத் வங்கி | | 3,139,750 | 7,297,345 |
| - `ற்றன் நசனல் வங்கி | | 544,150 | 447,290 |
| | | | |
| கையிலுள்ள காசு | | 9,404 | 9,404 |
| | | 557,240,367 | 900,006,350 |

# உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

| 2022 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல நிதியம் | பரிசு ஒதுக்கக் கணக்கு | பரிசு ஒதுக்கக் கணக்கு | மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | ஊழியர் நலன் திட்டங்களின் மீள் மதிப்பீட்டு இலாபம் / நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2021.01.01 இல் உள்ளவாறு மீதி | 4,400,000 | 698,558,607 | 685,860,083 | 614,729,237 | (3,139,116) | 2,000,408,811 |
| 2021 ஆம் ஆண்டில் | | (250,426,959) | 2,870,088,373 | | | 2,619,661,414 |
| சேர்க்கப்பட்டவை | | | | | 5,863,008 | 5,863,008 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | (2,991,728,983) | | | (2,991,728,983) |
| சனாதிபதி நிதியத்திற்கான ஒதுக்கீடு - 2021 | **4,400,000** | **448,131,648** | **564,219,474** | **614,729,237** | **2,723,892** | **1,634,204,250** |
| | | | | | | |
| 2021.12.31 இல் உள்ளவாறு மீதி | | 277,824,641 | 3,210,687,041 | 5,853,857 | 9,112,462.84 | 3,503,478,003 |
| | | | (3,459,115,473) | | | (3,459,115,473) |
| 2022 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவை | **4,400,000** | **725,956,289** | **315,791,041** | **620,583,095** | **11,836,354** | **1,678,566,779** |

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. அறிக்கையிடும் நிறுவனம்

அபிவிருத்தி லொத்தர் சபை 1997ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகத்தின் முகவரி இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 ஆகும். இவ்வருடத்தில் சபையின் முதன்மையான பணி லொத்தர் சீட்டுகளை விற்பனை செய்வதாகும்.

## 2. தயாரிப்பதன் அடிப்படை

### 2.1 இணக்க கூற்று

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள, இதனகத்துப் பின்னர் புள்ளி விபரங்கள் என அழைக்கப்படும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரச நிதி ஒழுங்குவிதிகளிலும் மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளும் குறித்துரைக்கப்படுகின்ற நியமங்களுக்கு அமைவாக இந்நிதி கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2. அளவீட்டின் அடிப்படை

பின்வருமாறு காட்டப்பட்டுள்ள முறைகள் தவிர்ந்ததாக இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

நிலையான வைப்பீடு மீதான முதலீடு - நியாய பெருமதியின் அடிப்படையில்

காணிகள் மற்றும் கட்டிடங்கள் - மீள் கணிப்பீட்டு பெறுமானத்தின் அடிப்படையில்

பணிக்கொடைகளுக்கான ஒதுக்கம் - பணிக்கொடை களுக்கான சூத்திரம் மற்றும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடுகளின் நடப்பு பெறுமதியின் அடிப்படையில்

### 2.3 நடைமுறை சார்ந்த மற்றும் சமர்ப்பண செலாவணி

நிதிக்கூற்றுக்கள் சபையின் நடைமுறை சார்ந்த இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது. இலங்கை ரூபாய்கள் வடிவத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து நிதி தகவல்களும் அண்மித்த ரூபாய் பெறுமானத்தில் மட்டமாக்கப்பட்டுள்ளது.

### 2.4 வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட திகதி

2022 டிசம்பர் 31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுக்கள் வெளியிடுவதற்கு 2023 பெப்ரவரி 23ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளை ஈடுபடுத்துதல்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக முகாமைத்துவம் கணக்கிட்டு கொள்கைகளை நடைமுறை படுத்துதல் மற்றும் அறிக்கை இடப்படுகின்ற சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவுகளுக்கு தாக்கம் விளைவிக்கின்ற தீர்ப்புகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவங்கள் மற்றும் நிலவுகின்ற சூழ்நிலைகள் ஆகியவற்றின் கீழ் நியாயமானதென கருதப்படுகின்ற எதிர்பார்ப்புகளும் உள்ளிட்ட ஏனைய காரணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். ஆகவே உண்மையான பெறுபேறுகள் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளையும் விட மாற்றம் அடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள ஊகங்கள் இடையறாத அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்தில் அது தாக்கம் விளைவிக்கின்ற எந்த ஒரு எதிர்கால காலத்திற்குமான கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அடையாளம் காணப்படும்.

### 2.6 ஏதுவான தன்மை மற்றும் போதுமான தன்மை

நிதி கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் இல.01 இற்கு இசைந்தொழுகும் அனைத்து சமமான உருப்படிகளும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். தன்மை அல்லது செயற்பாட்டில் சமமற்ற உருப்படிகளும் பொருட்களாயின் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். இனங்காணப்பட்ட அளவுகளை எதிரீடு செய்வதற்கு சட்டபூர்வமாக எதிர்வீடு செய்வதற்கு உண்மையுள்ள போதும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது ஒரே தடவையில் சொத்துக்களை காசுருவாக்கி பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு நோக்கம் கொண்டுள்ள போது மாத்திரம் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களை எதிரீடு செய்து தேறிய பெறுமானம் நிதிநிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும். ஏதேனும் கணக்கிட்டு கொள்கையொன்றின் அல்லது பொருள்கோடல் ஊடாக வரையறுக்கப்பட்டு அல்லது அனுமதி அளிக்கப்பட்டு இருக்குமாயின் தவிர அத்துடன் கணக்கிட்டு கொள்கைகளில் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு வருமானம் மற்றும் செலவுகள் விரிவான நிதி கூற்றுக்களில் எதிரீடு செய்யப்படாது.

### 2.7 வருமான வரி

சபையானது வருமான வரிக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி உள்ளிட்ட ஏனைய வரிகளுக்கு கட்டுப்பட்டதாகும். நிதிக்கூற்றுக்களில் இலங்கைமீது அறிக்கையிடல் நியமங்களை ஏதுவாக்கிக்கொள்ளும் விடயத்தை பின்பற்றுதல் தொடர்பாக வரி வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும் வரை நடப்பு மற்றும் ஏனைய வரிகளுக்கான மொத்த ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் வரி விதித்தல் நடவடிக்கைக்கு வரி அறவிட கூடிய இலாபம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு போதியளவு ஒரு தீர்ப்பு தேவையாக இருந்தது. இந்நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் வரிச் சட்டங்களின் ஏற்புடைய தன்மை தொடர்பான பொருள் கோடல்களுக்கு ஏதுவான நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வருமான வரி மற்றும் 7 வற் வரி மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. சபை மேன்முறையீடு செய்து எதிர்ப்பினை காட்டியுள்ளது. மேற்படி மதிப்பீடுகளில் பாரிய பொறுப்புக்கள் ஏற்படாதென சபை அபிப்பிராயம் கொள்கின்றது. மேற்கூறிய மதிப்பீடுகள் இன்னும் முடிவாகவில்லை. இருப்பினும், ஐஆர்டி மதிப்பீட்டிற்கான நிர்ணயம் எண் 0201617002ஐ வெளியிட்டுள்ளது. சபையானது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு 2011 ஆம் ஆண்டிள் 23 ஆம் இலக்க சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கு அமைவாக மேன்முறையீடு செய்துள்ளது. மதிப்பிடப்பட்ட தொகையில் 25 வீதத்திற்கு மீள் செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதத்தை சமர்ப்பிக்க வேண்டுமென சட்டம் தேவைப்படுத்தியுள்ளது. அதற்கமைவாக சபை ரூ 37,575,693.25 பெறுமதியுடைய

# கணக்கீட்டு கொள்கைகள்

வங்கி உத்தவாதமொன்றை சமர்ப்பித்துள்ளதுடன் இது குறிப்பு 12 இல் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு நிரந்தர வைப்பை திறப்பதன் மூலம் மேற்கொண்டுள்ளது.

2.8 இடையறாத்தன்மை

எதிர்வரும் காலத்தில் வணிக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சபைக்கு சொந்தமாக சொத்துக்கள் உள்ளதென்பதைப் பற்றி சபை திருப்தி அடைதல் வேண்டும். மேலும் நடப்பிலுள்ள தொழில் முயற்சியாக கம்பனி தொடர்ந்து இயங்குவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பாக கணிசமான அளவு ஐயம் ஏற்படக்கூடிய பொருண்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக சபை எதையும் அறியவில்லை என்பதுடன் சபையினை கலைப்பதற்கு அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்துவதற்கு அப்பிப்பிராயம் கொள்ளவில்லை. ஆகவே, சபையின் நிதி கூற்றுக்களை தயாரித்தல் இடையறா தன்மையை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது.

3. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

3.1 ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்

3.1.1இனங்காணுதல் மற்றும் அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை சேவைகளை வழங்குவதற்காக அல்லது நிர்வாக பணிகளுக்காக வைக்கப்பட்டுள்ள தொட்டு உணரக் கூடிய பொருட்களாக இருப்பதுடன் அவை ஒரு காலகட்டத்திற்கு மேற்பட்ட தடவைகள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அ. இனங்காணுதல்

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நலன்கள் சபைக்கு வந்து சேரும் ஆற்றல் உள்ளதாயின் அத்துடன் சொத்தின் கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் இனம் காணப்படும்.

ஆ. ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம்

அனைத்து அறிக்கையிடல் திகதியின் போதும் சபை சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் பெறுமான தேய்வு முறைகள் ஆகியவை தொடர்பாக மீளாய்வு செய்கின்றது. இந்த பெறுமானங்கள், விகிதங்கள் மற்றும் முறைகளை மதிப்பீடு செய்யும்போது முகாமைத்துவத்தின் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன் காரணமாக அவை நிச்சயமற்ற தன்மைக்கு உள்ளாகின்றது.

இ. அளவிடுதல்

ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் ஒட்டுமொத்த பெறுமானத் தேய்வினை கழித்த பின்னர் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு குறிப்பிடப்படும்.

சொத்துக்களை கொள்வதற்கு நேரடியாகவே ஏதுவானதாக அமையும் செலவுகள் கிரயம் என்பதில் உள்ளடங்குகின்றது. சுயமாக கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்களின் கிரயத்திற்கு அவற்றை கட்டியெழுப்புவதற்கு அத்தகைய சொத்து அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக்காக செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு நேரடியாகவே ஏதுவாக்கிக் கொள்ளக் கூடிய ஏனைய செலவுகள் மற்றும் பொருட்களை பகுதிகளாக கழற்றி அகற்றி அவை அமைந்திருந்த தளத்தில் மீள பொருத்துவதற்கு ஏதுவான செலவுகளும் இதில் உள்ளடக்குகின்றது. சொத்துக்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நலன்களை மீள அமைத்துக் கொள்வதற்கு அல்லது பேணி வருவதற்கு ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களை பழுது பார்த்தல் அல்லது பேணி வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகளும் அவ்வாறு செலவு செய்யப்பட்ட பின்னர் செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

ஈ. பிற்காலத்து செலவுகள்

நீண்ட சோதனைகள் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகள் உள்ளிட்டதாக தனித்தனியாக கணக்கு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் உருப்படி ஒன்றை மீளமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் செலவு மூலதனமாக்கப்படுகின்றது. ஏதேனும், ஆதனம், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரண உருப்படியொன்றின் ஒரு பகுதியின் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு வந்து சேர்வதற்கான வாய்ப்பு உள்ளதாயின் அத்தகைய கிரயத்தை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அத்தகைய உருப்படியை மீளமைப்பதற்கான கிரயம் உருப்படியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானத்தில் இனங்காணப்பட்டுள்ளது. மீளமைக்கப்பட்ட பகுதியின் முன் கொண்டு செல்லப்படும் பெறுமானம் அகற்றப்பட்டுள்ளது. ஆதனங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அன்றாட சேவை கிரயங்கள் உறப்பட்ட கிரயமாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

உ. பெறுமான தேய்வு

சாதனங்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்களின் அனைத்து பகுதிகளும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் மீது தேய்வுபெறுமானத்திற்கு உட்படுத்துதல் நேர்கோட்டு அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனம் காணப்படுகின்றது. சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு.

| | |
|---|---|
| கட்டிடங்கள் / கூடங்கள் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்தல்கள் | 25% |
| அலுவலக உபகரணங்கள் | 25% |
| யந்திர உபகரணங்கள | 12.50% |
| மோட்டார் வாகனங்கள்/ முச்சக்கர வண்டிகள் | 20% |
| கணினிகள் மற்றும் பாகங்கள் | 33.33% |
| வர்த்தக சின்னம் கொண்ட விற்பனைக் கூடங்கள் | 16.66% |
| மோட்டார் சைக்கிள்கள | 25% |
| உள்ளீடு மென்பாகங்கள் | 33.33% |
| செல்லிடத் தொலைபேசிகள | 50% |

ஒரு சொத்தை பயன்படுத்தக் கூடியவாறு சபைக்கு சொந்தமாக இருக்கும் திகதி முதல் அத்தகைய சொத்தை அகற்றும் திகதிவரை அல்லது அத்தகைய சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சபை அச்சொத்தினை பெறுமான தேய்வுக்கு உட்படுத்துகின்றது

ஏதேனும் தொட்டு உணரக்கூடிய சொத்தாக ஏதுவாக்கிக்கொள்ளக்கூடிய அத்துடன் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு கிடைக்கக்கூடிய தாயின் அத்தகைய சொத்தின் ஏதேனும் தொட்டு உணரக்கூடிய

சொத்தாக ஏதுவாக்கிக்கொள்ளக்கூடிய அத்துடன் எதிர்கால பொருளாதார நலன் சபைக்கு கிடைக்கக்கூடிய தாயின் அத்தகைய சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் அத்தகைய தொட்டு உணரக்கூடிய சொத்தாக அச்சொத்து அடையாளம் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட கணணி வன்பாகத்திற்கு அத்தியாவசியமாக தொடர்பு பட்டதாக அமையாத தெளிவாக இனம் காணக்கூடிய நம்பகத்தன்மையுடன் அளவிடக்கூடிய மற்றும் எதிர்கால பொருளாதார நலன்களை பெற்றுத் தருவதற்கு காரணமாக அமையக்கூடிய சபையினால் பயன்படுத்தப்படுவதற்கு அதிகாரம் உடைய அனைத்து கணனி மென்பாகங்களினதும் கிரயங்கள் ஐந்தொகையில் தொட்டு உணரக்கூடிய சொத்துக்கள் எனும் வகுதியின் கீழ் உள்ளடக்கி திரண்ட கடன் தீர் சொத்து மாற்றம் மற்றும் சேத இழப்புக்கான கிரயத்திற்கு முன் கொண்டு செல்லப்படுகின்றது.

ஊ. PPE இன் அங்கீகாரம் நீக்கப்பட்டது

PPE அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது PPE அங்கீகரிக்கப்படாமல் இருக்க வேண்டும் (PPE இருந்து அகற்றப்பட வேண்டும்). அப்புறப்படுத்துதலின் மீதான ஆதாயம் அல்லது நட்டம், அப்புறப்படுத்தப்பட்ட வருமானத்திற்கும், அப்புறப்படுத்தப்பட்ட தேதியில் சொத்தை எடுத்துச் செல்லும் தொகைக்கும் உள்ள வித்தியாசமாக அங்கீகரிக்கப்படுகிறது. இந்த ஆதாயம் அல்லது இழப்பு இலாப நட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. அகற்றல் வருமானம் வருவாயாக அங்கீகரிக்கப்படக்கூடாது.

3.2 பண்டங்களின் கையிருப்பு

பண்டங்களின் கையிருப்புகளின் கிரயத்திற்கு மேற்படி இருப்புகளை கொள்வதற்காக உறப்பட்ட செலவினங்களும் அவை இருக்கும் இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட ஏனைய செலவுகளும் உள்ளடங்கும். இதற்கமைவாக பண்டங்களின் கையிருப்பு களின் கிரயம் பின்வருமாறு கணிப்பிட படுகின்றது.

| | |
|---|---|
| லக்ன வாசனா | உண்மை கிரயத்தில் |
| சனிதா வாசனா | உண்மை கிரயத்தில் |
| ஜயோதா | உண்மை கிரயத்தில் |
| உடனடி லொத்தர் | உண்மை கிரயத்தில் |
| கோடிபதி கப்ருக | உண்மை கிரயத்தில் |
| சங்வர்தன வாசனாவ | உண்மை கிரயத்தில் |
| சுப்பர் போல | உண்மை கிரயத்தில் |
| அத கோட்டிபதி | உண்மை கிரயத்தில் |
| சசிறி | உண்மை கிரயத்தில் |

ஏனைய கையிருப்பு பொருட்களை கணிப்பீடு செய்ய FIFO அடிப்படையிலான முறை பயன்படுத்தப்பட்டது.

## 3.3 பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 3.3.1 பொறுப்புக்கள்

